# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

பக்கங்கள் 24

06 ஏப்ரல் 2019

புதுமை : 03 விதி : 148


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# இறுதிப் புலிப் பாய்ச்சல்













பிரமிக்க வைத்த தலைவர் பிரபாகரன்



மொசாம்பிக் சந்தித்த பேரழிவு




விடுதலைப் புலிகளும் போர்க் குற்றங்களும்



ஏரியல் ஷரோன் இறந்தாரா?

# புதுவிதி 100ஆவது இதழ் போட்டி
















புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 06 ஏப்ரல் 2019 | விதி : 148

# ஜே.வி.பி தலைவருக்குச் சிறை! கிரிக்கெட் தலைவருக்குப் பிணை!

## நிலைநாட்டப்படும் சுயாதீனமான நீதி

அண்மையில் இலங்கை கிரிக்கெட் டெஸ்ட் அணி தலைவரான திமுத் கருணாரட்ண வாகனத்தை ஓட்டிச் சென்ற போது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கிரிக்கெட் அணியின் தலைவர் திமுத் கருணாரட்ண விபத்தை ஏற்படுத்தியபோது மது போதையில் இருந்தார் எனக் கண்டறியப்பட்டது. எனினும் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டார்.

ஒருவர் ஒரு விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால் விபத்திற்கு காரணமாக இருந்தவரைச் சட்டபடி பிணையில் செல்ல அனுமதிக்க முடியாது எனக் கூறப்படுகின்றது.

அதேவேளையில் ஜே.வி.பி. தலைவர்களில் ஒருவரான லால் காந்த மதுபோதையில் வாகனம் ஓட்டிய போது ஏற்பட்ட விபத்தில் ஒரு பெண் காயமடைந்தார். லால் காந்த கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டார்.

இந்த நிலையில் எதிர்க்கட்சி அரசியல்வாதிக்கு ஒரு நீதி விளையாட்டு வீரருக்கு ஒரு நீதியா? எனப் பல தரப்பினராலும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இலங்கையில் சுயாதீனமான வகையில் நீதி நிலைநாட்டப்படுவதாக தம்பட்டம் அடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் கூட சுயாதீனமான நீதி இலங்கையில் நிலை நாட்டப்படுவதாகப் பேசப்பட்டது.

இந்தச் சுயாதீனமான நீதி என்பது ஆளுக்கொரு நீதி என்ற வகையிலும் எதிர்க்கட்சியினருக்கு ஒரு விதமாகவும் அரசு சார்பானவர்களுக்கு இன்னொரு விதமாகவும் பிரயோகிக்கப்படும் போது சுயாதீனமான நீதி என்பது நியாயங்களை குழி தோண்டி புதைக்கும் உரிமையாக மாறிவிடக்கூடாது. ஆனால், இலங்கையில் இது பல சந்தர்ப்பங்களில் பொலிஸ ராலும் சட்டமா அதிபர் திணைக்களத்தாலும் நீதி புதைக்கப்பட்ட வரலாறு உண்டு.

தற்சமயம் அந்நடவடிக்கை தொடர்பாக பொலிஸ்மா அதிபர் சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கோரியிருப்பதாகவும் அறிய முடிகிறது. இது வெறும் கண்துடைப்பா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**அகப்பை பிடிப்பவன் நம்மாள் என்றால் அடிப் பந்தியென்ன நுனிப்பந்தியென்ன!**

# கொழும்பில் வாகன நெரிசலால் 10 மில்லியன் ரூபா நட்டம்

கொழும்பில் தினமும் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடி காரணமாக ஏற்படும் வாகன நெரிசலால் தினமும் 10 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

வாகன நெரிசல்கள் ஏற்படும் போதும் சமிக்ஞை விளக்குகளுக்காகக் காத்திருக்கும் போதும் வாகன இயந்திரங்கள் இயங்கு நிலையிலேயே உள்ளன.

இதன் காரணமாக ஏராளமான எரிபொருள் விரயமாகிறது.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற போது நாட்டில் லொறி, கார், மோட்டார் சைக்கிள் என 5,000 வாகனங்களே இருந்தன. ஆனால் தற்சமயம் 70 இலட்சம் வாகனங்கள் வீதிகளை நிறைத்துள்ளன. எனினும் இந்த வாகன அதிகரிப்புக்கு சமாந்தரமாக புதிய வீதிகள் ஏராளமாக உருவாக்கப்பட்டு விட்டன. ஏற்கனவே இருந்த பிரதான வீதிகளும் அகலிக்கப்பட்டு விட்டன.



புதிய அதிவேக நெடுஞ்சாலைகளும் அமைக்கப்பட்டு விட்டன. பல உள்ளூர் வீதிகள் அதிரிக்கப்பட்டு கார்ப்பற் இடப்பட்டு விட்டன.

எனினும் கூட வீதிகள் வாகனங்களால் மூச்சுத் திணறிக்கொண்டு தான் இருக்கின்றன. முக்கிய அரசியல்வாதிகள், உயர் மட்ட அரச அதிகாரிகள், பிரமுகர்கள் என அதிகாரத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தமக்கெனப் பல வாகனங்களையும், குடும்பத்தினருக்கு எனத் தனித்தனியாக வாகனங்களையும் வைத்திருந்தால் வாகன நெரிசல் ஏற்படாமல் இருக்க முடியுமா?

**உலக்கை போற இடம் பாரார்!**
**ஊசி போற இடம் பார்ப்பார்!!**

# சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நாவின் குழு இலங்கையில்

ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கெதிரான குழுவின் 4 உறுப்பினர்கள் 02 ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ளனர். இவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நாட்டில் தங்கி நின்று அரச தரப்பினர், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் அமைப்புக்கள் எனப் பல தரப்பினரையும் சந்திக்கவுள்ளனர்.

இறுதியில் அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிடுவதுடன் அரசாங்கத்துக்கு சில ஆலோசனைகளையும் வழங்கவுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகள் குறிப்பாக புலனாய்வுப் பிரிவினர், ஆயுதப் படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் தொடர்பாக ஏராளமான முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச மனித உரிமை அமைப்புகள், ஐ.நா. அமைப்புகள் என்பன பல தடவைகள் இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகள் தொடர்பாக மீண்டும் மீண்டும் கண்டனங்களை வெளியிட்டு வந்தன. எனவே, தற்போது வந்துள்ள குழுவினர் நேர்மையான விசாரணைகளை மேற்கொண்டு அவை தொடர்பான அறிக்கையை வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், இலங்கையின் ஆட்சிப்பீடமோ, எதிர்க்கட்சியோ அறிக்கையில் குறிப்பிடும் உண்மைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அந்த அறிக்கை இலங்கையின் இறைமையைப் பாதிக்கிறது எனக் கூறி ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். தாங்கள் பயங்கரவாதிகளுக்கு எதிரான போரையே நடத்தினர் என்றும் எவ்வித முறை மீறல்களிலும் ஈடுபடவில்லை என்றும் கடிந்து சொல்லக்கூடும்.

எப்படியிருப்பினும் சர்வதேசக் குழுக்கள் வந்து விசாரணை மேற்கொண்டாலும் இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்கள் வழிமுறையை மாற்றப் போவதில்லை.

எனவே இக்குழுவினரின் விசாரணைகளிலும் எவ்வித பயனும் கிட்டப் போவதில்லையென்றே கருத வேண்டியுள்ளது.

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்










சினிமாவுல கொண்டைல டவல் கட்டிக்கிட்டு
பெட் காஃபியோட புருஷன எழுப்பற காட்சி..

அத உண்மையினு நம்பி கல்யாணம் பண்ணி கடைசியில பால் வாங்கிறதே ஆண்கள் தான்..!

























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## ஏமாற்றமே மிச்சமா...?

ஈழ அரசியலில் தமிழர்களின் இராஜதந்திரங்கள் சிங்களவர்களின் இராஜதந்திரத்திடம் வீழ்ந்ததே வரலாறு. தலைவர் பிரபாகரனைத் தவிர எந்த சிங்கள அரசையும் தமிழர் தரப்பால் கட்டுப்படுத்த முடியவில்லை. இராஜதந்திரம் என்ற பெயரில் தமிழர் தலைமைகள் இப்போது செய்துவரும் கோமாளித்தனங்கள் உண்மையில் வெட்கித் தலைகுனிய வைக்கின்றன.

ஜனநாயகத்தை நிலைநாட்டுகிறோம் - சர்வதேசத்திடம் நீதியைப் பெற்றுத் தருகிறோம் எனக் கூறிய தமிழ் சாணக்கியரின் பந்துகளுக்கு எல்லாம் சிங்கள அரசுகள் சிக்ஸர்களை விளாசி விட்டார்கள். ஆனால், சாணக்கியர் வாயால் மட்டுமே சிக்ஸர்களை விளாசியிருந்தார். இனப்பிரச்சினைத் தீர்வாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்புடனும் உருவான அரசமைப்பு நகல் வடிவம்கூடப் பெறாமல் கிடப்பிலேயே போடப்பட்டு விட்டது - அதாவது வாயால் சிக்ஸர் அடித்தவர் தனது முறையின்போது ஒரே பந்தில் ஆட்டமிழந்து விட்டார்.

விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதாக இன்னமும் அரசமைப்பு வரும் என்றும் - போர் கால அநீதிகளுக்கு நீதி நிலைநாட்டப்படும் என்றும் நம்பிக்கை வார்த்தை பேசிக்கொண்டிருக்கிறார். ஆனால், நம்பிக்கை தரக்கூடிய விதத்தில் அரசும் நடக்கவில்லை. அவரும் நடக்கவில்லை. இந்நிலையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்தி என்ற பெயரில் பல உதவித் திட்டங்களை வடக்கு, கிழக்கில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் வெறும் கண்துடைப்பே. தமிழ் மக்களின் இன்றைய - அவசிய தேவை இனப்பிரச்சினைக்கான தீர்வு - அதிகாரப் பகிர்ந் தளிப்பே. அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் தயாராக வில்லை. கூடவே வடக்கு தமிழ் மக்களின் ஜனநாயகமும் பறிக்கப்பட்டு வருகின்றது. 'தெற்கில் அமையும் எந்தச் சிங்கள அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வைத் தந்துவிடாது" என்பது தமிழ் மக்களின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் உதிர்த்த வார்த்தைகள்.

இந்த வார்த்தைகளில் தமிழ் மக்கள் ஆழமான நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். ஆனால், தந்தை செல்வா காலத்து நம்பிக்கைகள் போல் இன்னமும் ஏமாற்று அரசை நம்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் ஏமாற்றப்படுகிறோம் என்பதை இன்னமும் புரிந்து கொள்ளவில்லை அல்லது ஏமாற்றப்படுகிறோம் என்பதை வெளியில் சொல்ல அஞ்சுகிறது. ஆனால், இந்த ஏமாற்றத்துக்கு கூட்டமைப்புக்குள் இருக்கும் சில தவறான நபர்களும் காரணம். அவர்களை தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பியதற்காக இதன் விளைவுகளை தமிழ் மக்களும் ஏற்றாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால், விரைவில் வரவுள்ள தேர்தலில் மக்கள் விழிப்பாக இருப்பதே இப்போதிருக்கும் ஒரே வாய்ப்பு.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 45

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

தண்ணீரையும் அவனது இரத்தத்தையும் அந்தக் கிரவல் மண் உறிஞ்சிக் கொண்டிருந்தது. போட்டிருந்த உடை அழுக்காகி இருந்தது. எனக்கு உதவிய சகோதரியின் கைகளை கிரவல் கற்கள் உராய்ந்து திட்டுத்திட்டாக கிழித்து இரத்தத்துளிகளை வெளித்தள்ளிக் கொண்டிருந்தது.

'அக்கா உங்கட கையெல்லாம் கிரவல் கீறிப்போட்டுது. கைகளை கழுவுங்கோ" என்று கூறிய போது ' உங்கட கையும் தான் கீறுப்பட்டு இரத்தம் வருது" என அவள் உணர்த்திய போது தான் கைகளைப் பார்த்தேன். கருக்குமட்டை (பனைமட்டை) கீறியது போல சிறிதும் பெரிதுமான காயங்களும் கீறல்களும்.

பதுங்குகுழியில் இருந்து வெளியே வந்த ஒருத்தி போத்தலில் கிடந்த நீரை ஊற்றியபோது எரிவு உயிரைத் திருகியது. காயப்பட்டவர்களையும் அங்கங்களை இழந்தோரையும் நினைக்க வேதனை அழுத்தியது. கைப்பை தோளுக்குள் தொங்கிக் கொண்டு பத்திரமாக இருந்தது. நல்ல காலம் இன்று கைக்குழந்தையை கொண்டு வராமல் வந்தது. கொண்டுவந்திருந்தால் இப்படி உதவ முடியாமல் வெறும் பார்வையாளராகவும் உதவமுடியாத குற்றவுணர்விலும் தவித்திருப்பேன்.

இருப்பிடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். என்னோடு சிறுவனுக்கு உதவிபுரிந்த அக்காவும் வந்து கொண்டிருந்தார். கடையில் சில மரக்கறிகளை வாங்கிக்கொண்டோம். விலைகளைக்கேட்க தலைசுற்றியது. விட்டால் பிறகு அதுவும் கிடைக்காது. வாங்கிக்கொண்டு விலைவாசி பற்றியே கதைத்துக்கொண்டு நடந்தோம். ஒரு திருப்பத்தில் அந்த அக்கா விடை பெற்றுக் கொண்டார். அவரைக்கடந்த பின்பு தான் அவரிடம் பெயரைக்கூட கேட்காதது ஞாபகத்திற்கு வந்தது.

அறிமுகங்களை விட அவலங்களைப் பேசும் மக்களாகி விட்டோமே. இப்படியே போனால் எங்கள் மனநிலைகள் எப்படி இருக்குமோ? திருகிவிட்ட இயந்திரங்களாக திரியப்போகிறோமா? தப்பிப் பிழைப்போமா? தானியங்களும் உணவும் கிடைக்காமல் பட்டினியால் செத்திடுவோமா? குண்டுகள் உயிரைக் குடித்திடுமா? சிதறி ஆங்காங்கு அநாதையராய் இறந்து போவோமா? தனித்த பயணத்தில் குழப்பமான சிந்தனைகள் மனதை தேய்த்துக்கொண்டிருந்தது. யாரோடாவது கதைத்துக் கொண்டிருப்பது நல்லது. இல்லது விட்டால் பைத்திய நிலைதான் அடைய வேணும். அந்தச் சிந்தனை இந்தச் சிந்தனை இல்லாமல் கதைப்பது நல்லதே.

கணவர் குழந்தையை மரத்தில் சேலையில் ஏணை கட்டி நித்திரையாக்கிக் கொண்டிருந்தார். பின் பக்கமாக போனதால் நான் வந்ததை அவர் கவனிக்கவில்லை. தாலாட்டு தனியே பெண்களுக்கு உரியதென யார் சொன்னது ? ஆணின் குரலுக்கும் சக்தியுண்டு. அழகான தாலாட்டில் மகள் உறங்கிக்கொண்டிருந்தாள்.

வெயிலுக்கால போன உடனே பிள்ளைக்கு பால் கொடுக்க முடியாது. தேசிப்புளி கரைத்த தண்ணீரை மகன் குடித்துக் கொண்டிருந்தான். எனக்கும் இருந்தது. குடித்தேன். என்னுடைய காயங்களை கண்டு 'என்ன மீண்டும் மாத்தளனில் காவல்துறைக்கு அடிகுடுத்துட்டு வாற போல நாச்சியார் " என கணவர் கிண்டலடித்தது மனதுக்கு சுகமாக இருந்தது. காசை எடுத்து பத்திரமாக வைத்துவிட்டு வயல் வெளியில் தோண்டப்பட்ட சிறிய கிணறுகளைத்தேடி விரைந்தேன். பெண்கள் குளிக்கும் போது ஆண்கள் வராதபடியும் ஆண்கள் குளிக்கும் போது பெண்கள் போகாதபடியும் அவரவராகவே கட்டுப்பாடுகளை வகுத்திருந்தனர்.

வெட்டை வெளி. சரத்தை கட்டிக்கொண்டு குளிக்கத் தொடங்கினேன். பல பெண்கள் குளித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பகிடிகள் பெரிய பெரிய பகிடிகளாக இருந்தன. சண்டையும் சண்டைதான். மனிசன்மார் சண்டித்தனம் செய்ததில பலர் கர்ப்பமுற்றும் இருந்தனர். தடை ஊசிகள் வரத்து இல்லாமல் போட்டுது. இருந்தவையும் முடிந்து விட்டதால் கர்ப்பிணி பெண்கள் தொகையும் அதிகரிக்கத்தொடங்கியது.

அவர்களது பகிடிகள் கேட்க நன்றாகத்தானிருந்தது. என்னுடைய வாழ்வு முறையில் அப்பிடி பகிடி விடுமளவுக்கு எனது வளர்ப்புச் சூழலோ வந்த சூழலோ அப்படி இருக்கவில்லை. ஆதலால் அவை எனக்குப் புதிதான ரசனையாக இருந்தன. வண்டு ( வேவு விமானம்) சுற்றத்தொடங்கியதால் வேகமாக குளித்து விட்டு இருப்பிடத்தை அடைந்தேன்.

கணவர் சோறு சமைத்திருந்தார். மதியம் இரண்டு மணியாகிக் கொண்டிருந்தது. மரக்கறியை எடுத்து அரக்கப் பரக்க வெட்டத் தொடங்க தோழியின் மாமி கறியோடு வந்தார்.

'பிள்ளை சாப்பிட்டிட்டு பிறகு கறியை வையுங்கோ "

'இல்லையம்மா. நான் வேகமா கறி வைச்சிடுவன் " என்றேன்.

'சரி... சரி சாப்பிட்டிட்டு வேகமா கறிவைச்சு இரவுக்கு எங்களுக்கு கறி தாங்கோ ரீச்சர் " என மெல்லச் சிரித்தபடி கத்தியையும் மரக்கறிகளையும் வாங்கி வெட்டத் தொடங்கினார்.

'நீங்கள் சாப்பிட்டீங்களோ ?

'ஓமடா நாங்கள் சாப்பிட்டோம்"

நாங்கள் மூவரும் சாப்பிட்டோம். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது தோழியும் வந்தாள். மாத்தளனில் இன்று நடந்த சம்பவத்தை சொன்ன போது ' மாத்தளனுக்கும் சஞ்சிக்கும் பொருத்தம் குறைவு. வேற இடத்திலதான் சமமந்தம் பார்க்கோணும் " என தோழி சொன்னாள். வாய்விட்டுச் சிரித்தோம்.

சாப்பிட்டு விட்டு கதைத்துக் கதைத்து கறி வைக்கத் தொடங்கினோம். சாப்பாடுகளையும் பத்திரமாக பதுங்கு குழிக்குள்தான் வைத்து காத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

மண் பதுங்கு குழியில் சாப்பாட்டிற்குள் மண் போகாதபடி பைகளாலும் சேலைகளாலும் சுற்றிப்பாதுகாக்க வேண்டியிருந்தது. (சாட்சியம் நீளும்)

# விடுதலைப் புலிகளும் போர்க் குற்றங்களும்

■ யோகநாராயணன்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது அரச படைகளாகி மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுல விரோத நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2015 ஆம் ஆண்டு 30/01 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் அத்தீர்மானம் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றாத நிலையை 2017 இல் மேலும் இரண்டு வருடங்கள் வழங்கப்பட்டது. 2019 இல் மீண்டும் 40/01 தீர்மானம் மூலம் மேலும் இரண்டு வருடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாகப் பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட்டு அவை தொடர்பாகப் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக விசாரனையை மேற்கொள்ளும் முகமாக சர்வதேச நீதியாளர்களின் கண்காணிப்பு அல்லது பங்களிப்பு அவசியம் என்பதும் தீர்மானத்தை அமுல்படுத்துவது தொடர்பாக ஒரு ஐ.நாவின் கண்காணிப்பு அலுவலகம் கொழும்பில் நிறுவப்பட வேண்டும் என்பதும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது.


ஜெனீவாவில் 40 ஃ 01 தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு இணை அனுசரணை வழங்கியுள்ள போதிலும் இலங்கையில் ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டமைச்சர் உட்பட பல தரப்பினரும், தீர்மானம் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல தீர்மானங்களை நிறைவேற்றப் போவதில்லை எனக் கூறி வருகின்றனர். இந்நிலையில் இலங்கை அரசாங்கத்துக்குக் கால அவகாசம் வழங்கத் தமது ஆதரவை வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெவ்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கலப்பு நீதிமன்றத்தை உருவாக்க அரசியலமைப்புச் சட்டத்தில் இடமுண்டு எனத் தெரிவித்து வருகின்றார். த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அரசாங்கம் தீர்மானங்களை நிறைவேற்றாவிட்டால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க வேண்டி வரும் என எச்சரித்திருந்தார். தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவோ அரசாங்கத் தீர்மானத்தை நிறைவேற்றத் தவறினால் ஒக்ரோபரில் ரணிலின் ஆட்சி கலைக்கப்பட்டபோது சர்வதேச நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்தது போன்ற ஒரு நிலை மீண்டும் ஏற்படுமென மிரட்டியுள்ளார்.

ஆனால் அரசாங்கத்தை மனித உரிமைகள் பேரவையில் காப்பாற்றும் நோக்குடன் கால அவகாசம் வழங்க ஆதரவளித்து விட்டு அதன் பின்பு - அதாவது பிடியை அரசாங்கத்தின் கையில் கொடுத்து விட்டு இப்போது கொக்கரிப்பது வெறும் போலிக் கூச்சலென்றே பல தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கர வாத அமைப்பெனவும் அவர்களும் போர்க்குற் றங்களில் ஈடுபட்டனர் எனவும் அரசாங்க தரப் பும் எதிர்க்கட்சியினரும் கூறி வருகின்றனர். மஹிந்த தரப்பு, அரச படையினர் பயங்கரவாதி களிடமிருந்து தமிழ் மக்களை மீட்கவே மனிதா பிமான நடவடிக்கையை மேற்கொண்டரே யொழிய போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை யெனக்கூறி வருகின்றனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ இரு தரப்பினரும் தவறுகள் செய்துள்ளனர் எனவும் எனவே பழையவற்றை மறந்து விடுவோம் எனவும் கூறி வருகின்றார்.

த.தே. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனும் ஐ.நாவில் இலங்கையை காப்பாற்றும் வகையில் நடந்து கொண்டமை ஒருபுறமிருக்க கடந்த காலங்களில் இடையிடையே விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் எனக் கூறி சிங்களப் பேரினவாதிகளை மனம் குளிர வைப்பதும், எதிர்ப்புக்கள் எழுந்தவுடன் மௌனமாகி விடுவதுமான ஒரு போக்கை கையாண்டு வந்தனர். இதில் சுமந்திரன் கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்தி வந்தார்.



அண்மையில் நல்லூரில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் போரில் ஈடுபட்ட அதாவது அரச படைகளும் விடுதலைப் புலிகளும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறியிருந்தார். தமிழ் மக்களைப் பல்லாயிரக்கணக்காகக் கொன்றொழித்து, ஏராளமான மக்களை ஊனமுற்றவர்களாக்கி, சொத்துக்களை அழித்து, இடம் விட்டு இடம் இடம்பெயர வைத்து, பாதுகாப்பு வலயங்கள் என அறிவித்து அங்கு மக்களை குவித்து விட்டு விமானக் குண்டுகளாலும், எறிகணைகளாலும் மனித வேட்டையாடி கொடூரம் புரிந்து அரச படைகளையும் தமிழ் மக்களைப் பாதுகாக்க பசி, தாகம், தூக்கம் என எவற்றையும் பொருட்படுத்தாமல் களமாடி உயிர் நீத்த, ஊனமுற்ற, தடுப்பு முகாம்களில் பலவித கொடுமைகளையும் அனுபவித்த விடுதலைப் புலிகளையும் ஒரே தட்டில் போட்டு சமன் செய்ய முனைகிறார் சுமந்திரன்.

இறுதிப் போரின்போது விடுதலைப் புலிகள் ஒப்பற்ற அர்ப்பண உணர்வுடன் போராடிய போது தமிழ் மக்கள் உயிரிழப்பு, ஊனமுறல், சொத்திழப்பு, இடம்பெயர்வு, பசி, பட்டினி என சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த போது கொழும்பில் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து கொண்டு எமது அவலங்களை வெறும் செய்திகளாக கருதி வாழ்ந்தவர்களுக்கு விடுதலைப் புலிகள் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார்களா இல்லையா என்பதைப் பற்றி கூற என்ன அருகதை உண்டு என்ற கேள்வியே தமிழ் மக்களின் கொதிக்கும் நெஞ்சில் எழுகிறது.

கொலைகாரரையும், கொள்ளையர்களையும், பாலியல் வல்லுறவாளர்களையும், கட்டுக் கட்டாய் பணம் வாங்கிக் கொண்டு காப்பாற்றுவது அப்புக்காத்து தொழிலுக்குப் பெருமையாக இருக்கலாம் ஆனால் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க் குற்றம் புரிந்தவர்களை காப்பாற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியுமா? மனித குல விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களுடன் விடுதலைப் போராளிகளை சமன் செய்ய முனைவதை மன்னிக்க முடியுமா?

இது ஆட்சியாளர்களுக்கும், தமிழ் மக்களின் குருதி குடித்தவர்களுக்கும் வக்காலத்து வாங்கும் பச்சை துரோகமல்லவா? விடுதலைப் புலிகள் தேசத்துரோகத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும், காட்டி கொடுப்புகளுக்கு எதிராகவும், சமூக விரோதச் செயல்களுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

இதன் காரணமாக கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, சந்திச் சண்டித்தனம் எதுவுமேயில்லாத ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்க முடிந்தது. நடுநிசியிலும் நகைகளுடன் பயமின்றி ஒரு பெண் நடமாடும் சூழல் நிலவியது. பசளை, கிருமி நாசினி, எரிபொருள் உட்படக் கடும் பொருளாதாரத் தடைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் உள்ளூர் வளங்களை கொண்டு உற்பத்தியில் ஈடுபட்டு ஒருவர் கூட ஒருநாள் கூட பட்டினியில் வாடாத அளவிற்கு பொருளாதாரத்தில் தன்னிறைவு ஏற்படுத்தப்பட்டது.

இவர்கள் இப்படி ஒரு உன்னத நிலை ஏற்பட்டதை போர்க் குற்றம் எனக் கூறுகின்றனரா? இப்போது போன்று லஞ்சம் கொடுக்காமல் எந்த விடயத்தையும் செய்ய முடியாது என்ற நிலை அன்று இல்லாமல் செய்யப்பட்டமைக்காக கவலைப்படுகிறார்களா?

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தருமதி விஜயகலா மகேஸ்வரனே 'சில தவறுகள் இல்லாமல் போக வேண்டு மானால் மீண்டும் விடுதலைப் புலிகள் பிறப்பெடுக்க வேண்டும்" எனக்கூறித் தனது இராஜாங்க அமைச்சுப் பதவியையே இழந்தார். ஆனால் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினரானவர்கள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும், போர்க் குற்றவாளிகள் என்றும் கூறி வருகின்றனர். இந்த வெட்கக்கேட்டை யாரிடம் சொல்லி அழுவது?

போரில் பெற்றோரை இழந்த பிள்ளைகளை விடுதலைப் புலிகள் செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச் சோலை போன்ற அமைப்புக்கள் மூலம் பராமரித்தனர். அவர்களில் பலரை ஆசிரியர்களாக, மருத்துவர்களாக, அரச பணியாளர்களாக உருவாகியதைப் போன்றே 18 வயதானபோது போராளிகளாக சிலர் மாறினர். இது அவர்களின் உரிமை ஆனால் விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்துப் போர்க் குற்றம் புரிந்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆதரவற்ற சிறுவர்களை வீதியில் பிச்சையெடுக்க விடாமல் பராமரித்து சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக வளர்ப்பது போர்க் குற்றமா? இவ்வாறு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பல நல்ல விடயங்கள் போர்க் குற்றங்களாக சித்தரிக்கப்பட்டன. ஒடுக்குமுறையாளர்கள் அப்படித்தான் பிரசாரம் செய்வார்கள். அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஆனால் தமிழர் பிரதிநிதிகளாக இருப்பவர்களும் அதே குரலில் பேசினால் அதை ஏற்க முடியுமா?

தமிழ்மக்களின் ஐக்கியத்தை கட்டி வளர்க்கவும், ஜனநாயகக் குரலாகவும் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டதுமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்களிடம் வெறுப்படைய வைக்கவும் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தவும், சிதைக்கவும் சிலர் செய்யும் சதியின் ஒரு பகுதியே இப்படியான பிரசாரம் என்ற சந்தேகமும் எழுந்தான் செய்கின்றது.

ஆனால், தமிழ் மக்களை நீண்ட காலம் ஏமாற்றி விட முடியாது என உணரப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை.

# இறுதிப் புலிப் பாய்ச்சல்

■ நிலவன்

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பலத்த சவால்கள் மிக்கத்து - பல துரோக வரலாறுகளையும் கொண்டது. அவற்றிலிருந்து மீண்டு, இராணுவ அடக்குமுறை களைத் தகர்த்து சாதனை படைத்த நம் போராட்டம் இலங்கை, இந்திய இராணுவங்களுடன் விடுதலைப் புலிகள் நேரடியாக மோதி சமர்க்கள வரலாற்றில் புதிய சாதனைகளைப் படைத்தனர். இறுதிப் போர் என அழைக்கப்படும் நான்காம் கட்ட ஈழப்போர் விடுதலைப் புலிகளின் ஆயுதத்தை மௌனிக்க வைத்தது.

முதல் 3 ஈழப் போர்களில் சாதனை வெற்றிகளைப் படைத்த புலிகள் தோற்றது ஏன்...? என்பதை பலரும் பலவிதமான முடிவுகளாக சொல்கிறார்கள். அது அவர்களின் கருத்துக்கள். ஆனால், படைத்துறை வரலாற்றில் சாகசங்களைப் புரிந்த புலிகள் இறுதியாக நடத்திய பெரும் சமர்தான் ஆனந்தபுரம் எதிர்ச் சமர்.

படைத்துறை வரலாற்றில் மட்டுமல்ல இலங்கை இராணுவத்தின் போர்க் குற்ற வரலாற்றிலும் இந்தச் சமருக்கு மிக முக்கியமான இடமுண்டு. ஆனந்தபுரம் முற்றுகை உடைப்பு தனியே இலங்கை இராணுவத்துக்கு எதிராக நடத்தப்பட்ட சமரல்ல. இந்தியாவின் இராணுவ மூளைக்கும் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட வல்லரசுகளின் ஆயுதப் பரிசோதனைகளுக்கும் மற்றும் பல நாடுகளின் இராஜதந்திர - போர் தந்திர மூளைகளுக்கும் எதிராக நடந்த போர்.

ஆனந்தபுரம் பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் கடாபி, பிரிகேடியர் மணிவண்ணன், பிரிகேடியர் துர்க்கா, பிரிகேடியர் விதுஷா என இந்தத் தேசத்தின் மிக முக்கிய போர்த் தளபதிகளைப் பறித்தெடுத்தது. ஆனால், இந்தப் போர் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் தலைவிதியையும் மாற்றிய போரும்கூட. இக்காரணங்கள் இப்போது அல்லாவிட்டாலும், சரியான தருணத்தில் வெளிவரும். இதனால்தான் இந்தப் போரை எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டும் என்பதற்காக போர்க் குற்றங்களை வழமையிலும் அதிகமாகப் புரிந்தது. தனது இராணுவ வலிமை முழுவதையும் வல்லரசுகளின் போர் மூளைகளையும் பயன்படுத்தியது.

இறுதிப் போர்க்களம் வழக்கமான இலங்கை இராணுவத்தின் நகர்வு போன்று இருக்கவில்லை. அது தந்திரங்கள் நிறைந்த நகர்வு மட்டுமல்ல. தண்ணீர் ஓட்ட நகர்வு என்று கூறுவார்கள் இராணுவ வல்லுநர்கள். வழக்கமாக இராணுவம் நகரும்போது தடைகள் ஏற்பட்டால் அந்தத் தடையை உடைக்க முடியாமல் பின்வாங்கும், பின்னர் மீண்டும் முயற்சிக்கும். ஆனால் இறுதிப் போரில் இராணுவம் வழக்கமான தனது இந்தப் போர் உத்தியைப் பயன்படுத்தவில்லை. முன்னேறும்போது தடைகள் ஏற்பட்டால் பின்வாங்கி விடும். பின்னர், எதிர்ப்பு அதிகமில்லாத பகுதிகளால் நகர்ந்து எதிர்ப்பு அதிகமிக்க பகுதியை வலுவற்றதாக்கி அந்தப் பகுதியையும் ஆட்கொள்ளும். தண்ணீர், தடையை விட்டு விலகிச் சென்று பின்னர் தடை இடத்தையும் மூழ்கடிக்குமோ அதுபோன்றதே இந்த நகர்வும்.

வன்னிப் பிராந்தியத்தில் மும்முனைகளில் பெரும் ஆளணி, மற்றும் படைத்துறை சாதனங்களுடன் முன்னேற, விடுதலைப் புலிகள் பின்னோக்கி செல்லும் தந்திரோபயத்தைக் கைக்கொண்டனர். புலிகள் இந்த உத்தியைக் கையாளக் காரணம், சகல பகுதிகளையும் வலுவாக்கிப் போரிடும் ஆள் வளம் புலிகளிடம் இருக்கவில்லை. அதுமட்டுமின்றி புலிகளிடம் இருந்த பிரதேசங்கள் பல காடும், வயலும், வெளிகளும் நிறைந்த பகுதிகள். மரபுவழிப் போருக்கு மாற்றமடைந்த புலிகள் நிலத்தைத் தக்க வைக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். தவிர, அவர்களிடம் மாற்றுத் திட்டங்களும் இருந்தன.

பெருமெடுப்பில் மூன்று முனைகளில் நகர்ந்த இராணுவம் புலிகளின் இராணுவத் தலைநகரான புதுக்குடியிருப்பில் ஒன்றிணைய நகர்ந்தன. இதனால் மக்கள் மாத்தளன், புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் பிரதேசங்களில் தஞ்சமடைந்தனர். இதனால் புதுக்குடியிருப்பை மையப்படுத்தி பெரும் மறிப்புத் தாக்குதலுக்கு புலிகள் திட்டமிட்டனர். இந்தச் சமரில் பல நூறு புலிகள் மண் விடுதலைக்காக தங்கள் உயிர்களை ஈகம் செய்து மாவீரர்களானார்கள்.

பெரும் ஆளணி இழப்பை சந்தித்து எஞ்சிய புலிகள் ஆனந்தபுரத்துக்கு நகர்ந்தனர். புலிகளின் அனைத்துத் தாக்குதல் அணிகளும் ஆனந்தபுரத்துக்குள் இருந்த நிலையில் இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டது. இந்த முற்றுகையால் புலிகளின் அணிகள் சுமார் 800 மீற்றர் சதுர மீற்றர் பரப்புக்குள் அடைபட்டனர். கிட்டத்தட்ட ஆனந்தபுரத்துக்குள் கிட்டத்தட்ட 3 வாரங்கள் இந்த முற்றுகை நீடித்தது. மார்ச் 24 ஆம் நாளுடன் முற்றுகை இன்னும் இறுகியது. காயப்பட்ட போராளிகளைக்கூட நகர்த்த முடியாது போனது. போராளிகளுக்கான உணவு விநியோகம் துண்டித்துப் போனது. அதையும் மீறி ஒருநாளில் ஒரு வேளை உணவையாவது போராளிகள் கடத்தி விடுவார்கள். கஞ்சி அல்லது சோறும் பருப்பும்தான் உணவு. இதேநிலை தொடர்ந்து பத்து நாட்களுக்கு நீடித்தது.

முற்றுகையை உடைப்பது என்பது பலத்த சவாலாக இருந்தது. சில நூறு புலி வீரர்களே தொடர்ந்து முற்றுகையை எதிர்த்து தாக்கிக் கொண்டிருந்தனர். தொடர்ந்து சமரில் ஈடுபட்டதாலும், காயமடைந்த, வீரச்சாவடைந்த போராளிகளை களமுனையை விட்டு நகர்த்த முடியாமையால் களம் இறுகியது. முற்றுகைக்குள் சிக்கியிருந்தவர்களின் ஆயுத வளமும் தீர்ந்து வந்ததால் களம் மேலும் இறுகியது. தொடர்ச்சியான போர், உணவில்லை - உறக்கமில்லை - காயத்துக்கு மருந்தில்லை - தோழர், தோழியரின் இழப்பு என்பவற்றுடன் உளவியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பெரும் சோர்வை சந்தித்திருந்தார்கள்.


ஆனாலும் முற்றுகையை உடைத்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தார்கள். இந்த முற்றுகையை உடைக்கத் தவறினால் வரலாறு தங்களை மன்னிக்காது என்பதை களமுனைக் கட்டளைத் தளபதிகள் நன்குணர்ந்திருந்தனர். சர்வதேசத்தின் சக்திகளுக்கு எதிராகப் போர் வியூகம் வகுத்தனர் நம் தளபதிகள். அதுமட்டுமல்ல ஆனந்தபுரம் களம் தக்கவைக்கப்பட வேண்டும் என்பதிலும் அவர்கள் கவனமாக இருந்தனர். ஏனெனில் ஆனந்தபுரம் களத்தை இராணுவம் வெற்றிகொள்ளும் பட்சத்தில் மக்கள் இருக்கும் பகுதிகளுக்குள் புதிய களமுனைகள் உருவாகும் வாய்ப்பும் இருந்தது. எனவே ஆனந்தபுரத்தை புலிகள் வெற்றிகொள்ள வேண்டிய கடப்பாடும் இருந்தது.

சிறுபகுதிக்குள் எத்தனை நாள் தாக்குப்பிடிப்பது? தொடர் எறிகணை வீச்சுக்கள் ரவை மழைக்குள் தாக்குப்பிடித்து நின்ற புலிகள் தளரத் தொடங்கினர். வடபோர் முனைக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் கடாபி, பிரிகேடியர் மணிவண்ணன், பிரிகேடியர் துர்க்கா, பிரிகேடியர் விதுஷா உட்பட தளபதிகளும் நேரடி மோதலில் ஈடுபடுகின்றனர். இத்தாக்குதலில் அவர் காயமடைகிறார். காயமடைந்த நிலையிலும் போராடுகிறார்.

1985 களிலேயே களமுனைக்கு வந்துவிட்ட இந்தத் தளபதிகளின் இறுதிச் சமர்க்களமாக இந்தச் சமர் அமைகிறது. ஏப்ரல் 3 ஆம் நாள் அதிகாலை முற்றுகை உடைப்பு தொடங்குகிறது. மூண்ட கடும்சமரில் பிரிகேடியர் தீபன் மீண்டும் காயமுறுகிறார். இராணுவத்தின் சினைப்பர் குழு கைவரிசையை தொடங்குகிறது. ஏப்ரல் 4 ஆம் நாள் பிரிகேடியர்களான விதுஷா, துர்க்கா, மணிவண்ணன் ஆகியோர் வீரமரணமடைகின்றனர்.

படுகாயமடைந்திருந்த தளபதிகள் தீபன், கடாபி போர் முனையில் நின்றவாறு ஆலோசனைகளை வழங்குகின்றனர். இந்தத் தாக்குதல்களுக்கு மத்தியில் - நள்ளிரவு வேளையில் பிரிகேடியர் பானுவின் அணி முற்றுகையை தகர்த்து வெளியேறுகிறது. ஆனால் துர்திர்ஷ்டம் உடைக்கப்பட்ட முற்றுகை ஒரு சில மணி நேரங்களுக்குள்ளேயே மீண்டும் மூடப்படுகின்றது. இறுதிவரை யுத்தத்தைத் தாங்கி நின்ற தளபதிகளுடன் பலநூறு போராளிகள் வீரகாவியமாகின்றனர். இதன் பின்னரான நாட்களில் புலிகள் பெரிய தாக்குதல்கள் எதையும் நடத்தவில்லை. நடத்தக்கூடிய சூழலும் இருக்கவில்லை. இதனால் ஆனந்தபுரம் புலிகளின் இறுதிப் பாய்ச்சலாக அமைந்து விட்டது.





# பிரமிக்க வைத்த பிரபாகரன்!

திரைக் கதாசிரியர், இயக்குநர், நடிகர் எனத் தமிழ்த் திரையுலகில் ஆதிக்கம் செலுத்திய ஆளுமை மகேந்திரன். ஈழத் தமிழர்களின் திரை முயற்சிக்கும் – ஈழத் தமிழரின் அவலங்களை ஆவணப்படுத்தவும் முயற்சிகளை எடுத்தவர். 2002 – 2006 சமாதானப் பேச்சுக் காலத்தில் ஈழம் வந்தவர், 3 மாத காலம் தங்கி விடுதலைப் புலிகளின் திரைப்பட பிரிவுக்கு அரும்பணியாற்றினார். இங்கிருந்து தமிழ்நாடு திரும்பிய அவர் ஆனந்த விகடனில் எழுதிய கட்டுரையை அஞ்சலி செலுத்தும் முகமாக புதுவிதி மீள்பிரசுரம் செய்கிறது.

“துப்பாக்கிகளுக்கும், கண்ணி வெடிகளுக்கும் இடையே ஒரு அதிரடி சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது. இயக்குநர் மகேந்திரன் தமிழீழத்தில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார்.

திடீரென்றுதான் அழைப்பு. ரொம்ப நாளாக நின்றுபோயிருந்த சாசனத்தின்இறுதிக்கட்ட வேலைகளில் இருந்தேன். தமிழீழத்தில் சினிமா பற்றி ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சினிமா பற்றிச் சொல்லி, ஒரு படமும் தயாரித்துத் தரவேண்டும். வரமுடியுமா? என்று கேட்டார்கள். மறுவார்த்தையாக மறுப்புச்சொல்லாமல் சம்மதித்தேன். அருமையான மூன்று மாதங்கள். அங்கேயிருந்து 1996 என்ற அவர்களின் வாழ்க்கை சார்ந்த சினிமாவை எடுத்துக் கொடுத்தேன். யாருமே முறைப்படி அனுபவம் பெற்ற நடிகர்கள் கிடையாது. 1996ன் இறுதிக்கட்ட வேலைகளில் இருந்தபோதுதான், திடீரென்று எடிட்டிங் அறையின் வெளியே கார் வந்து நின்றது.

சினிமா, கலைப் பிரிவுக்குத் தலைமை வகிக்கும் சேரா என்னை அணுகினார். நீங்கள் அவசியம் அவரைச் சந்திக்க வேண்டும். அவரும் உங்களோடு கதைக்க விரும்புகிறார். இப்போதே நீங்கள் புறப்பட வேண்டும் என்றார்கள். அதற்கான ஏற்பாடுகள், விவரணைகள், பாதுகாப்பு, சிறிய பதட்டம், பரபரப்பு, ஆர்வம். நாம் சந்திக்கப்போகிறவர் யார் என்று புரிந்துவிட்டது. வேகம் பற்றிக்கொண்டது. சூழ்நிலை கெடுபிடி ஆகிவிட்டது. வழியெங்கும் தம்பியின் படை. பிரமாதமான கட்டுக்கோப்பு.

உங்களில் யாராலும் யூகிக்க முடியாத இடத்தை நோக்கிய பயணம். சேரா என்னிடம் மெல்லிய சிரிப்போடு, பேசிக் கொண்டே வந்தார். தலைவர் உங்களின் உழைப்பைப் பற்றி விசாரித்தார். சந்தோஷப்பட்டார். பார்க்க வேண்டும் என்று விரும்பினார். இந்த விருப்பம் சாதாரணமானதல்ல என்று பேசிக்கொண்டே வந்தார். எனக்கு ஒன்றுமே நிலை கொள்ளாமல் தவித்தேன். உலகத்தையே தன் பக்கம் பார்க்க வைக்கிற மாபெரும் தலைவன். அவரையே சந்தித்துப் பேசப் போகிற பேரனுபவம். அதை எப்படி நாம் உள்வாங்கப்போகிறோம் என்றெல்லாம் சிந்தனைகள்.

திடீரென்று அடுக்கடுக்கான விசாரணைகள். பாதுகாப்பு குளறுபடி இல்லாத கம்பீரமான விசாரணை. இருப்பிடம் நெருங்கப்போகிறோம் என்று தெரிந்துவிட்டது. சேராவிடம், நான் அவரை எப்படிக் கூப்பிடுவது. சார் என்றா, அல்லது வேறு முறையிலா? என்று, போட்டோக்களில் பார்த்திருந்த அவரின் கம்பீரத்தை நினைவுபடுத்திக் கேட்டேன். நீங்கள் அவரைத் தம்பி என்று அழைத்தால் பிரியப்படுவார். நாங்கள் எல்லோருமே அவரை எங்களுக்குள் அழைக்கும் விதம் அதுதான். ஒன்றும் பயப்பட வேண்டாம் என்றார். நான் பயப்படவில்லை. பெருமிதப்பட்டேன்.

அந்த இடமும் வந்தது. அரசியல் பிரிவுத்தலைவர் தமிழ்ச்செல்வன் வெள்ளைச் சிரிப்போடு எங்கிருந்தோ பிரசன்னமானார். என்னை வரவேற்று, அவர் இருக்கிற அறைக்கு அழைத்துப்போனார். நான் எப்படி அந்தக் கதவைத் திறப்பது என்று கணநேரம் திகைத்தபோது, மெல்லத் திறந்தது கதவு. வர்ணிக்க முடியாத கம்பீரத்தில் என்னை வணங்கினார் பிரபாகரன். என்னால் அவரை ஐயா என்றுதான் அழைக்க முடிந்தது.

என்னை இருக்கையில் அமர்த்திய பிறகே உட்கார்ந்தார். என் மனக்கதவுகளையெல்லாம் திறந்து உள்ளே போய்க் கொண்டேயிருந்தார் தலைவர்.

உருகிக்கரைந்து உள்ளே போய்க்கொண்டேயிருந்தேன். அன்போடு பேசத்தொடங்கினார் தம்பி.

நாங்கள் உறக்கம் இல்லாமல், சதா விழித்துக் கொண்டேயிருக்கிறோம்

என்றால், நீங்களும் ஏன் அப்படி இருக்கவேண்டும்? உழைக்கிற நேரத்திற்குத் தகுதியாக நீங்கள் ஓய்வெடுக்கலாம் என்ற கரிசனத்தோடு ஆரம்பமானது பேச்சு. இரண்டு பேருமே ஐயா என்று விளித்துக் கொண்டோம். இராணுவம் எங்கள் நாட்டில் இளம்பெண்களைக் கற்பழித்தது. அப்படிக் கேவலப்படுத்தியதைவிட, தமிழ் சினிமா பெண்களை இழிவுபடுத்துகிறது என்று வருத்தத்தோடு பேசினார். கன்னத்தில் முத்தமிட்டால் எங்களைச் சரியாக முன்னெடுத்து வைக்கவில்லை என்று சுட்டிக்காட்டினார். பாரதிராஜா ஆய்த எழுத்து படத்தில் நடித்திருக்க வேண்டியது அவசியம்தானா? என்று கேள்வி எழுப்பினார்.

தமிழ் சினிமாவின் மீது அக்கறைப்பட்ட பேச்சை அப்படியே ஹாலிவுட் பக்கம் திருப்பினார் தம்பி. எனக்கு ஆச்சர்யம்... யார் இவர்! இவரின் பார்வைகள் என்ன? இப்படி ஒரு சின்ன தேசத்திலிருந்து உலகமே திரும்பிப் பார்க்க புறப்பட்டு வந்தது எப்படி? என்றெல்லாம் மனம் அலை பாய்ந்தது. ஹாலிவுட் படங்களும் திசை திரும்பியதைக் குறிப்பிட்டார். உங்களுக்கு ஹாரிசன் போர்டை பிடிக்குமா? என்று எனக்குப் பிடித்த அவரையே குறிப்பிட்டார்.

படக்காட்சிகளைத் தனித்தனியாகப் பிரித்துப்பேசினார். எனக்கு 200 ஹொலிவுட் சி.டிகளைப் பரிசாகத் தந்தார். அரைமணி நேரத்திற்கு இருக்கும் என்று நினைத்திருந்த பேச்சு மூன்றரை மணி நேரத்திற்கு விரிந்தது. என்னோடு உணவருந்தினார். என்னை முழுமையாக விசாரித்தார் முள்ளும் மலரும் க்ளைமேக்ஸ் தன்னைப் பாதித்ததைக் குறிப்பிட்டார். உதிரிப்பூக்கள் அனுபவத்தைப் பகிர்ந்தார்.

நாங்கள் விடைபெறுகிற அந்தத் தருணம் வந்தேவிட்டது. வாசல் வரைக்கும் வந்து வழியனுப்பினார். கடைசியாகப் பேசிக்கொள்கிற நிமிடங்கள் உன்னதமாக அமைய, கூடியிருந்த பாதுகாப்புகளை விலகியிருக்கச் சொன்னார். நீங்கள் அடுத்த முறையும் வருவீர்கள். ஆனாலும் யுத்தம் அப்போதும் நடக்கும். இருந்தாலும் உங்களைச் சந்திப்பேன். என்றார். அவரது பேரன்பின் அடையாளமாகச் சிறிய தங்கப்பதக்கத்தைக் கொடுத்தார். அவரோடு புகைப்படம் எடுத்துக்கொள்கிற விருப்பம் உடனே நிறைவேற்றப்பட்டது. திரும்பி வண்டியில் உட்கார்ந்தபோது சீருடை, துப்பாக்கிகளோடு தலைவரின் அனுபவ சாந்தமும் மனசுக்குள் வந்தது.

கொழும்பு விமான நிலையத்தை வந்தடைந்தேன். என்னுடைய கைப்பையை வாங்கி, ஒரு சிங்கள அதிகாரி சோதனையிட்டார். அந்தப் பதக்கத்தைப் பார்த்த மறு விநாடி என்னை நிமிர்ந்து பார்த்து, புன்னகைத்து, உடனே கைப்பையை மூடி என்னை விமானத்தின் வாசல் வரைக்கும் வழி நடத்தினார். விமானத்தில் வந்து உட்கார்ந்து யோசித்தபோது,

சந்தித்த மூன்றரை மணி நேரமும் ஒரு வார்த்தை கூட பிரபாகரன் அரசியல் பேசவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது.

”அவருக்கு எரிக் சோல்ஹெய்மிடம் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது. தமிழ்ச்செல்வனிடம் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது. இந்த மகேந்திரனிடமும் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது.”

# வாரபலன்

### மேடம்
முயற்சிகளின் போது தக்கவர்களின் ஆலோசனையைக் கேட்கவும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். வியாபாரிகள் கவனத்துடன் இருந்தால் கொடுக்கல் வாங்கல்களை லாபகரமாக முடிக்கலாம்.

### ரிஷபம்
குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய நட்புகள் உருவாகும். மனச்சோர்வுக்கு ஆளாகாமல் உழைப்பீர்கள். தேக ஆரோக்கியம் பலப்படும். முடிவெடுக்கப்படாமல் இருந்த விஷயங்களில் தெளிவு பிறக்கும். உறவினர்களை அரவணைத்துச் செல்வது நலம்.

### மிதுனம்
தொழிலில் நல்லலாபம் கிடைக்கும். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி வாகை சூடுவீர்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் கைகூடும். உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும்.

### கடகம்
குழப்பங்களைச் சந்திக்க நேரிடும். முயற்சிகள் நிறைவேறுவதில் சில தடைகள் ஏற்படும். உறவினர்களிடம் மனக்கசப்புகள் தோன்றும். குடும்பத் தேவைகளைப் பூர்த்திச் செய்வதில் கடும் முயற்சிகள் எடுக்க வேண்டி வரும்.

### சிம்மம்
இவ்வாரம் பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடத்த முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வேலைகளில் வீண் அலைச்சல்கள், அநாவசியச் செலவுகள் உண்டாகும். உறவினர்களை அனுசரித்து செல்லவும்.

### கன்னி
குடும்பத்தில் நிம்மதி பூத்துக் குலுங்கும். புதிய நட்புகள் உருவாகும். பொருளாதாரத்தில் சீரிய முன்னேற்றம் தென்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடத்துவதற்கான சூழல் ஏற்படும். சில நேரங்களில் விரயங்களும் உண்டாகும்.

### துலாம்
குதூகலமான காலமாக இருக்கும். எண்ணங் கள் யாவும் ஈடேறும். சில முயற்சிகளில் வெற்றி பெறத் தடைகள் உண்டாகும். வாகனங்கள் ஓட்டும்போது கவனத்துடன் இருக்கவும். சொந்த வீட்டுக்கு குடிபோகும் பாக்கியம் சிலருக்கு உண்டாகும்.

### விருச்சிகம்
உங்கள் செல்வாக்குக் கூடும். உடல் ஆரோக்கியம் பலப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். வீண் அலைச்சல்கள் ஏற்படாது. வரவேண்டிய பணம் தானாகவே வந்து சேரும். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள்.

### தனுசு
அனைத்து இடையூறுகளும் விலகி காரிய சித்திகள் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். புகழ், செல்வாக்கு வளரும். உடல் ஆரோக்கியம் அவ்வப்போது குறையும். உணவு விஷயங்களில் எச்சரிக்கை தேவை.

### மகரம்
எதிர்பார்த்த பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். பணம் பலவகையிலும் வந்து சேரும். இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு சரியான காலமிது. திட்டமிட்ட காரியங்கள்வெற்றிகளைக் கொடுக்கும். எதிரிகளை சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள்.

### கும்பம்
குடும்பத்தில் குதூகலம் இருக்கும். முயற்சி கள் யாவும் வெற்றியைத் தேடித் தரும். சமூகத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். தொழிலில் ஏற்றங்களைக் காண்பீர்கள். குறிக்கோள்களை ஒன்றன்பின் ஒன்றாக வெற்றியடையும். தொழிலில் திறமையை வெளிப்படுத்துவீர்கள்.

### மீனம்
உழைப்பிற் கேற்ற பலன் கிடைக்கும். பொருளாதாரம் சீராக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உங்கள் மதிப்பு மரியாதை உயரும். தேவைக்கேற்ப உறவினர்கள் உதவுவார்கள். உடன்பிறந்தோர் வகையில் சிறு விரிசல்கள் உண்டாகும்.







'தாயகம்' அறக்கொடை நம்பிக்கை நிதியத்தின் அங்குரார்ப்பண விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பெருமாள்கோயில் ஸ்ரீ லஷ்மி நாரயணா மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்களும் 22 பயனாளிகளுக்கு பசு மாடுகளும் வழங்கப்பட்டன.






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி வாலிபர் முன்னணியினர் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய பண்ணிசைப் போட்டியை நடத்தியது. இதில் மாணவி ஒருவருக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பரிசில் வழங்குவதையும் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.



லீக்ரென்ஸ்ரைன் நாட்டின் முடிக்குரிய இளவரசி சோபி சுவிஸ் தலைநகர் பேர்ணில் அமைந்துள்ள அருள்மிகு ஞான லிங்கேசுவரர் ஆலயத்திற்கு சென்றிருந்தார். ஆலய பரிபாலன சபையினரால் தமிழ் பண்பாட்டுமுறையில் அவருக்கு மரியாதை அளிக்கப்பட்டது.

# மூன்று மீன்கள்

ஒரு குளத்தில் மூன்று மீன்கள் இருந்தன. அவற்றின் பெயர் வருமுன் காப்போன், வருங்கால் காப்போன், வந்தபின் காப்போன் என்பனவாகும். இவை கவலையின்றி குளத்தில் வாழ்ந்தன. ஒரு நாள் சில வலைஞர்கள் அந்தக் குளத்தில் பருத்து வளர்ந்திருந்த மீன்களைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். மீண்டும் அங்கு வந்து மீன்களைப் பிடிக்கப்போதாக பேசிக் கொண்டார்கள். உடனே இன்னொரு குளத்திற்குப் போய்விட வேண்டும் என்று வருமுன்காப்போன் மற்றைய மீன்களை எச்சரித்து உடனே குளத்தை விட்டு வெளியேறி விட்டது. வருங்கால்காப்போனோ அவாகள் வந்தால் யோசிக்கலாம் என்று கூற, வந்தபின் காப்போனோ எதற்கு இந்த அவசரம் என்று பேசாமல் இருந்துவிட்டது. பேசிக்கொண்டபடி அடுத்த நாள் அந்த மீனவர்கள் அங்கு வந்து வலைகளை வீசினார்கள். செத்த மீன் போல் கிடந்த



வரும்போதுகாப்போனை வலையிலிருந்து எடுத்து வீச, அது தண்ணீருக்குள் விழுந்து புல்லுக்குள் மறைந்து கொண்டது. வலைஞர்கள் மற்றைய மீன்களைப் பிடித்துக் கொண்டு மகிழ்சியோடு சென்றார்கள். எதையும் எப்பொழுதும் சிந்திக்காதவன் பிழைக்கவே மாட்டான்.



# அறிவோம் தெளிவோம்

## நோபல் பரிசு 3

ஒரு பத்திரிக்கையில் வெளிவந்த குறித்த செய்தியை அறிந்தநோபல், தான் கண்டுபிடித்த கண்டுபிடிப்புக்கள் உலகை அச்சுறுத்தும் ஆயுதங்கள் என்பதை உணர்ந்து தனது சொத்தில் 94 வீதத்தினை மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு பங்களித்தவர்களுக்கு பயன்படுத்துமாறு உயில் எழுதினார். அதற்கமையவே , இயற்பியல் வேதியியல், அமைதி, மருத்துவம் மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு தனது பெயரிலேயே பரிசில்களை வழங்குமாறு நோபல் தனது உயிலில் எழுதிவைத்தார். அழிக்கும் ஆயுதங்களால் தான் பெற்றுக்கொண்ட செல்வங்கள், ஆக்கும் உயிர்களுக்கு செல்லட்டும் என்பதே அவரின் வாழ்நாளின் இறுதி ஆசையாகும். இந்நிலையில் 1895 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி தனது 63 ஆவது வயதில், எல்பிரட் நோபல் உயிரிழந்தார்.

மீதி அடுத்த வாரம்...





# பசியாதவேளை புசியாதே

- பசியை உணர்ந்து, பசி ஏற்படும் போதுதான் சாப்பிடவேண்டும். பசி இல்லாத போது நேரத்தைப் பார்த்து சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- பசிக்கிற அளவிற்குத் தகுந்தவாறு உண்ணுகிற உணவின் அளவை மாற்றிக் கொள்ள வேண்டும். ஒரே மாதிரியான பசி எப்போதும் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.
- மனதிற்கு பிடித்த உணவுகளை மட்டும் ரசித்து ருசித்து உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.


# அட அப்படியா?

- ஜப்பான் நாட்டு தேசிய கீதம் நான்கு வரிகளைக் கொண்டது.
- இஸ்லாமிய நாட்காட்டியின்படி வருடத்தின்ஷ முதலாம் மாதத்தை முகரம் என்று அழைக்கிறார் கள்.
- உலகிலேயே கைதிகளை அடைப்பதற்காக கைதி களைக் கொண்டு கட்டப்பட்ட ஒரே சிறை அந்த மான் சிறை .
- பக்கிங்ஹாம் அரண்மனையில் 775 அறைகள் உள்ளன. இவற்றில் 188 ஊழியர்களுக்கான படுக்கை அறைகள் , 92 அலுவலக அறைகள், 78 குளியல் அறைகள் உள்ளன .
- லண்டன் நகரின் பாரம்பரிய சின்னமாக விளங்கும் பிக்பென் கடிகாரத்தை உருவாக்க 13 ஆண்டுகள் தேவைப்பட்டன .இங்கேயுள்ள மணியின் பெயர் "பிக் பென்" .ஆனால் கட்டடிடத்தின் பெயர் "எலிசபெத் கோபுரம்"





# பழமொழியின் திரிபு :



"வக்கத்தவன் வாத்தியார் வேலைக்கு போ, போக்கத்தவன் பொலீஸ் வேலைக்கு போ" என்ற பழமொழி கூட "வாக்கு கற்றவன் வாத்தியார் வேலைக்கு போ, போக்கு கற்றவன் பொலீஸ் வேலைக்கு போ" என்ற பழமொழியின் திரிபே ஆகும்.

"சோழியன் குடுமி சும்மாடு ஆகாது" என்ற பழமொழி உருமாறி "சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்று மாறி போயிருக்கிறது. "சும்மாடு" என்பது தலையில் சுமை தாங்க பயன்படும் பொருள்.புதிதாக வந்த மருமகள் வீட்டிற்குரிய மாமியாரை வீட்டை விட்டு வெளியேற்றும் செயலுக்கும், அதற்கு இணையான நிகழ்வுகளுக்கும் எடுத்தாளப்படும் பழமொழியே, "ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டியதாம்" என்பதாகும்.


இதில் பிடாரி என்பது பெண் தெய்வத்தை குறிக்கிறது. லட்சுமி, சரஸ்வதி, துர்க்கை போன்ற பெண் தெய்வங்களுக்கு ஊரின் நடுவே கோயில் அமைக்கப்பட்டு, கொற்றவையும், காளிக்கும் ஊரின் எல்லையில் கோயில் அமைக்கப்பட்டன. அந்த நிகழ்வை குறிக்க உருவான பழமொழியே இது.

மகாபாரத போரின்போது, குந்தியிடம் கர்ணன் கூறும் "ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்ற வாசகம் பின்னர் பொருள் புதைந்து மாறிப்போயிருக்கிறது. ஐந்து சகோதரர்களோடு ஆறாவதாக கர்ணன் சேர்ந்தாலும் போரில் சாவு உறுதி. துரியோதனன் கூட்டத்தார் நூறு பேரோடு இருந்தாலும் சாவு உறுதி என்பதே உண்மை பொருள்.

# அதென்ன பஞ்சபூதம், பஞ்சஇந்திரியம்?

ஐந்து பொருட்கள் அடங்கியவற்றை பஞ்ச என்ற வார்த்தையுடன் இணைத்து அழைக்கிறோம்.

நிலம்,நீர்,தீ,காற்று,ஆகாயம் என ஐந்தும் அடங்கியதுதான் பஞ்ச பூதங்கள்.




மெய்,வாய், கண்,மூக்கு,செவி என ஐந்தும் சேர்ந்தது பஞ்ச இந்திரியம்

வாழைப்பழம், சர்க்கரை, தேன், நெய், பேரிச்சம் பழம் இவை ஐந்தும் சேர்ந்தது தான் பஞ்சாமிர்தம்.

# பன்னாட்டு பொன்மொழிகள்

ஒரு மனிதன் வாழ்ந்தான் என்ப தற்கு அவன் ஒரு வீடாவது கட்டி யிருக்க வேண்டும். ஒரு மகனாவது பெற்றிருக்கவேண்டும். அல்லது ஒரு நூலாவது எழுதியிருக்க வேண்டும்

- இத்தாலி

மெலிந்தவனை அரைஆள் என் றும், பருத்தவனை முழுஆள் என் றும் கணக்கிடுவதில்லை

- ஆபிரிக்கா

மனிதனுக்கு முதன்மையான பகைவன் மனிதனே.

- இங்கிலாந்து

மனிதன் தனக்குள் ஒரு கொடிய விலங்கைவைத்திருக்கிறான்

-ஜேர்மனி

வாழ்க்கை என்பது காற்றின் நடுவிலுள்ள ஒரு தீபம்

- ஜப்பான்

# நிலமெங்கும் மிதக்கும் பிணங்கள் மொசாம்பிக் சந்தித்த பேரழிவு



ஒரு சூறாவளிதான் அதுவும் கடந்துபோய் இரு வாரங்கள் ஆகின்றன. ஆனால், அதன் பாதிப்பிலிருந்து கொஞ்சமும் மீள முடியாமல் தவிக்கிறது தென்னாபிரிக்காவின் கிழக்குப் பகுதியில் இருக்கும் நாடான மொசாம்பிக். அங்கே மட்டுமல்ல, அருகே இருக்கும் நாடுகளான மலாவி, சிம்பாவே நாடுகளிலும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மார்ச் 4 ஆம் திகதி இந்து சமுத்திரத்தில் சூறாவளி உருவானது. அதற்கு இடாய் எனப் பெயரிடப்பட்டது. அப்போது யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை இடாய் ஓர் அழியாத வடுவைக் கொடுத்துவிட்டுப் போகும் என்று.

மார்ச் 4 ஆம் தகிதி மொசாம்பிக்கின் அருகே இருக்கும் இந்து மாகடல் பகுதியில் உருவானது இடாய் சூறாவளி. அப்போதே அதன் தாக்கம் நிலப்பகுதியில் தெரிய ஆரம்பித்துவிட்டது. அடுத்த நாள் மொசாம்பிக் மற்றும் மலாவியில் கடுமையான மழை பெய்யத் தொடங்கியது. இதற்கடுத்த தொடர்ச்சியான நாள்களில் தீவிரமடைந்தது இடாய் சூறாவளி. ஒரு வழியாக 14 ஆம் திகதி பெய்ரா நகரின் அருகே கரையைக் கடக்கத் தொடங்கியது. அப்போது அந்தப் பகுதியில் 105 கி.மீ வேகத்தில் காற்று வீசத் தொடங்கியதோடு மட்டுமன்றி மழையும் தீவிரமடைந்ததால் நகரின் பல பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டது. தொடர்ந்து 10 நாள்களுக்கு மேல் நீடித்த இடாயின் விளைவால் நாடு முழுவதிலும் நிலைமை மோசமாகத் தொடங்கியது, குறிப்பாக பெய்ரா நகரில்.

மொசாம்பிக் நாட்டில் இருக்கும் நான்காவது பெரிய நகரம் பெய்ரா. புங்க்வே நதி கடலில் கலக்கும் கழிமுகப் பகுதி இந்த நகரத்தில்தான் அமைந்திருக்கிறது. அதன் காரணமாக மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்றப்பட்டதால் பாதிப்பும் அதிகமானது. சூறாவளி கரையைக் கடந்த பின்னரும் மழை தொடர்ந்ததால் மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது. அதற்குள்ளாகப் பல லட்சக்கணக்கான மக்கள் அவர்களின் இருப்பிடத்தை இழந்திருந்தனர். வயல் வெளிகள், சாலைகள், நீர் நிலைகள் என வித்தியாசமே தெரியாத அளவுக்கு வெள்ளப் பாதிப்பு இருந்தது. இப்போது இரண்டு வாரங்கள் கடந்துவிட்ட நிலையில் நாடு இன்னும் சகஜமான நிலைக்குத் திரும்பவில்லை.

கிட்டத்தட்ட 700 பேர் பலியாகியிருக்க லாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது. காணாமல்போன பலரின் நிலைமை இன்னும் தெரியவில்லை என்பதால் இந்த எண்ணிக்கை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். பலி எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட உடல்கள் இப்போது வெளியே தெரிய ஆரம்பித்திருக்கின்றன. ஆங்காங்கே மனித உடல்கள் பரவிக்கிடக்கின்றன. அதே நேரம் உண்மையான சவால் என்பது இனிமேல்தான் இருக்கப்போகிறது.

இதுபோன்ற இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு ஏற்படும் அடுத்தகட்ட பாதிப்புகளை இரண்டாவது பேரழிவாகக் கணக்கில் கொள்ளலாம். திடீரென ஏற்படும் இயற்கைப் பேரழிவால் உணவு, உடை, இருப்பிடம் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுவார்கள். இடாய் புயலால் இதுவரை இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான கட்டுமானங்கள் அழிவுக்குள்ளாகியிருக்கிறது. ‘முன்பு இருந்தது. வேறு எதுவும் பெரிதாக இல்லையென்றாலும்கூட வாழ்க்கை இயல்பாக நகர்ந்துகொண்டிருந்தது. சூறாவளிக்குப் பின்னர் எதுவுமே இல்லை, அந்த வீடுகூட” எனப் பெய்ராவாசி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

சுத்தமான குடிநீர், உணவு ஆகியவை பொதுமக்களுக்குக் கிடைப்பது கடினமானதாக இருந்துவருகிறது. வெள்ளப் பெருக்கு போன்ற பாதிப்புகளுக்குப் பிறகு, நோய் தாக்கும் அபாயம் என்பது அதிகளவில் இருக்கும். அரசாங்கம் பயந்தது போலவே தற்போது கொலரா பாதிப்பு மக்களிடையே தென்பட ஆரம்பித்திருக்கிறது. ஒரே நாளில் பெய்ரா நகரில் கொலராவால் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை ஐந்திலிருந்து 100 ஐத் தாண்டியிருக்கிறது. பல நாடுகள், மொசாம்பிக் இந்தப் பாதிப்பிலிருந்து மீள்வதற்கு உதவி செய்து வருகின்றன.

இடாய் சூறாவளியின் பாதிப்பை தென்னரைக்கோளத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய பேரழிவு என அறிவித்திருக்கிறது ஐ.நா. சபை. சமீப காலமாக உலகம் முழுவதும் அதிகரித்துவரும் இயற்கைப் பேரிடர்களுக்குக் காலநிலை மாற்றத்தைக் கை காட்டுகிறார்கள் சூழலியல் நிபுணர்கள்.



அதேபோல இடாய் இந்த அளவு மோசமான பாதிப்பை ஏற்படுத்தக் காலநிலை மாற்றம் காரணமாக இருக்கலாம் என்பது பலரின் கருத்தாக இருக்கிறது.

‘இடாய் சூறாவளி காலநிலை மாற்றத்தின் பாதிப்பை நமக்கு உணர்த்தும் வகையில் அடிக்கப்பட்ட எச்சரிக்கை மணி” எனத் தெரிவித்திருக்கிறார் ஐ.நா. சபையின் செயலாளர் அன்டோனியோ கட்டர்ஸ் (Antonio Guterres). வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள காலநிலை மாற்றத்துக்கான மாநாட்டில் அதைத் தடுக்க ஏதாவது திட்டத்துடன் வாருங்கள் என உலக நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

# ஏரியல் ஷ
# இறந்தார

■ நடராஜா முரளிதரன்

சில நாட்களுக்கு முன் இறந்த முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் "ஏரியல் ஷரோன்" மேற்குலகத் தலைவர்களின் அஞ்சலியோடு, அரச மற்றும் பூரண இராணுவ மரியாதையோடு அவரது பண்ணை வீட்டுத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டு விட்டார். இறக்கும்போது அவருக்கு 85 வயது. 2006ஆம் ஆண்டு முதல், "ஏரியல் ஷரோன்" இஸ்ரேலின் மருத்துவமனையொன்றில் இறக்கும் வரை நினைவுகளற்ற "கோமா" நிலையில் உயிருள்ள சடலமாகவே இருந்து வந்துள்ளார்.

பல்வேறு பதவிகளை வகித்த "ஏரியல் ஷரோன்" இஸ்ரேலின் பிரதமராக 2002 முதல் 2006 வரை இருந்திருக்கின்றார். அதே போல் 1981 இலிருந்து 1983 வரை இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்துள்ளார். அவர் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அந்தக் காலப்பகுதி வரலாற்றில் என்றுமே சர்ச்சைக்குரிய காலப்பகுதியாகவே அமைந்தது. ஈழத்தமிழர்களான நாமும் அந்தக் காலப்பகுதி தொடர்பான வரலாற்றோடு பல வழிகளிலும் தொடர்புடையவர்களாக உள்ளோம்.

"ஷரோன்" 2005 இல் "காஸா" பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படைகளைத் திரும்ப வரவழைத்த வேளையில் அனைத்துலக சமூகத்தின் பாராட்டினைப் பெற்றுக்கொண்ட தோற்றப்பாடு ஒன்று இருந்தது. அரசியல் விமர்சகர்களது பார்வையில் அவர் இஸ்ரேலிய நிறவெறி அரசின் முக்கிய சிற்பி. "ஷரோன்" 1982 இல் லெபனான் நாட்டின் Sabra மற்றும் Shatila பலஸ்தீன அகதி முகாம்களில் இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட படுகொலைகள் அவரது தனிப்பட்ட உத்தரவின் பேரிலேயே நிகழ்த்தப்பட்டதாகவும் அதற்கான பொறுப்பு அவருடையதெனவும் மனித உரிமை அமைப்புகள், அனைத்துலக ஊடகங்கள் கண்டனங்களை வெளியிட்டிருந்தன. ஏறத்தாள ஆயிரம் பலஸ்தீனியப் அப்பாவிப் பொதுமக்கள் அந்தச் சம்பவங்களின் போது கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

"ஏரியல் ஷரோன்" மிகவும் நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு மனிதர் . அவர் "இஸ்ரேல்" என்ற நாட்டின் கட்டுமானம் தொட்டுப் பல விடயங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்திருக்கின்றார். அவர் "இஸ்ரேல்" நடத்திய ஒவ்வொரு போர்களிலும் பங்கு கொண்டு சண்டையிட்டவர். பல இஸ்ரேலிய இராணுவத் தளபதிகள் செய்தது போன்று பின்பு அரசியலுக்குள்ளும் நுழைந்து கொண்டவர்.

அவர் 1948இல் "இஸ்ரேல்" என்ற நாடு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே இராணுவத்தில் மேலதிகாரிகளின் கட்டளைகளை மீறிச் செயற்பட்டு வந்துள்ளார். 1953இல் மிகவும் நன்கு அறியப்பட்ட இராணுவ நடவடிக்கையாக "ஏரியல் ஷரோன்" "பிரிவு 101" க்குத் தலைமை தாங்கி Qibya என்ற கிராமத்தில் நிகழ்த்திய படுகொலைகள் மிகவும் கொடூரமானவையாகக் கருதப்படுகின்றது. இந்தப் பிரிவு இஸ்ரேலியர் மீதான தாக்குதலுக்குப் பழிவாங்கும் வகையில் பதிலடியாக பலஸ்தீனக் கிராமங்கள் பலவற்றில் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்திருக்கின்றது.

இதிலுள்ள சுவாரசியமான விடயம் என்னவென்றால் இவ்வாறான நடவடிக்கைகளின் மூலமாக இராணுவத்தில் பாராட்டுக்களுடனும், அதிக பொறுப்புகளுடனும் அவரால் மேல்நோக்கி முன்னேற, முக்கிய பதவிகளைப் பெற முடிந்தது என்பதே! "டேவிட் பென் குரியன்" இஸ்ரேலின் முதல் பிரதம மந்திரி மட்டுமல்லாது "இஸ்ரேல்" என்ற நாட்டையே நிர்மாணித்தவராக விதந்துரைக்கப்படுபவர். அவ்வாறான "பென் குரியனாலேயே" ஒரு "நோயியல் பொய்யர்" என்று குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்த "ஏரியல் ஷரோன்". ஆனாலும் , :"பென் குரியன்" தொடர்ந்து "ஏரியல் ஷரோனை" பாலஸ்தீனக் கிராமங்களையும், அண்டை அரபு நாடுகளையும் அச்சுறுத்தப் பயன்படுத்திக் கொண்டார்.

பலஸ்தீனியக் கிராமங்களும், அருகிலுள்ள நாடுகளும் கட்டுப்படுத்தப்படுவதற்கு மனிதாபிமானமற்ற முறையில் பிரயோகிக்கப்படும் வன்முறை கையிலெடுக்கப்பட்டது. அவ்வாறான பிரயோகிப்பதற்கு ஈவிரக்கமில்லாத , மனிதாபிமானச் சட்டங்களைக் கருத்திற் கொள்ளாத "ஏரியல் ஷரோன்" போன்ற இரும்பு மனிதர்கள் பயன்படுத்தப்பட்டார்கள்.

"ஏரியல் ஷரோன்" மிக முக்கியமான பங்கொன்றினை லெபனான் போரின் போது வகித்திருந்தார். உண்மையில் அவர் பாதுகாப்பு மந்திரியாக இருந்த அந்த வேளை "இஸ்ரேலிய" அரசு ஆரம்பத்தில் திட்டமிட்டதைவிடக் கடுமையான நடவடிக்கையில் அவர் "இஸ்ரேலியப்" படைகளை ஈடுபடுத்தி விட்டார் என்று கூறப்பட்டது. இன்னும் சில உயரதிகாரிகள் இஸ்ரேலிய அரசாங்கத்தை "ஏரியல் ஷரோன்" ஏமாற்றிவிட்டார் என்றும் வாதிட்டனர். இந்தச் சர்ச்சையைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முன் தோன்றிய "ஏரியல் ஷரோன்" "இதில் எந்தப் பிரச்சினையும் இருப்பதாக நான் கருதவில்லை. அரபுக்கள் தங்களுக்குள் தாங்களே சுட்டுக் கொன்றார்கள்" என்ற முழுப்பொய்யை அவிழ்த்து விட்டார். இறுதியில் விசாரணைக் குழு "எரியல் ஷரோன்" தன் முழு வாழ்நாள் காலத்திலுமே பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்ற முடிவைப் பரிந்துரைத்திருந்தது..

ஆனால் வரலாற்றின் படிகளில் அவர் இன்னும் மேலே சென்று "இஸ்ரேலின்" பிரதம மந்திரி ஆனார். பிரதம மந்திரியே அனைத்து அமைச்சுகளையும் மற்றவர்களுக்குப் பிரித்து வழங்குபவர். அந்த வகையில் குறிப்பிட்ட காலம் வரை அந்தப் பொறுப்பையும் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டார் "ஷரோன்". அவ்வாறு பிரதமராக இருந்த வேளையில் பலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பில் அவர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த வேளை இரண்டாவது Intifada கிளர்ச்சி பலஸ்தீனர்களால் மேற்கொள்ளப்பட்ட காலகட்டம். பின்பு "காஸாவில்" நிலைகொண்டிருந்த இஸ்ரேலிய இராணுவத்தை "ஏரியல் ஷரோன்" திரும்பப் பெற்றுக்கொண்டமை குறித்து அரசியல் விமர்சகர்களால் நிறையவே பேசப்பட்டது. "லிகுட் கட்சியின்" கடும் எதிர்ப்பு அந்த நடவடிக்கைக்கு எதிராக எழுந்தது.

"ஏரியல் ஷரோன்" இஸ்ரேலின் மிக ஊழல் மலிந்த அரசியல்வாதிகளில் ஒருவரும் கூட! அவர் மீது லஞ்ச ஊழல் மற்றும் பணமோசடி தொடர்பாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் இருந்தன. அவர் மீதான குற்றச்சாட்டுகள் சூடு பிடித்து குற்றவியல் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த மிக முக்கியமான காலகட்டத்தில்தான் அவர் நோய்வாய்ப்பட நேர்ந்தது. அந்த நேரத்தில் அவர் "கோமா" நிலைக்குச் சென்றதால் விசாரணையிலிருந்து ஒருவாறு மேலும் தப்பிக்க முடிந்தது.

அதனால் பிரதம மந்திரிக்கு எதிரான குற்றவியல் விசாரணை முடக்கப்பட்டதால் அவரது கட்சியான "கட்டிமா" விசாரணையின் விளைவுகளிலிருந்தும், எழக்கூடிய நெருக்கடிகளிலுமிருந்தும் மீண்டது. "கட்டிமா" கட்சி "ஏரியல் ஷரோனால்" நிர்மாணிக்கப்பட்ட கட்சியும் கூட. பின் அடுத்து வந்த தேர்தலைக் கட்சித் தலைவர் அற்ற நிலையிலும் "கட்டிமா" கட்சி சந்தித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் "ஏரியல் ஷரோன்" பாலஸ்தீனிய அரசை நிர்மாணித்து மேலும் பிராந்திய சலுகைகளை பலஸ்தீன மக்களுக்கு



வழங்குவதற்குத் தயாராக இருந்தார் என்பது மாதிரியான செய்திகள் அமெரிக்காவின் பிரதான ஊடகங்கள் சிலவற்றில் வெளியாகின. இஸ்ரேலின் மிகவும் தந்திரமான அரசியல்வாதிகளின் பட்டியலில் "ஷரோனுக்கும்" மிக முக்கிய இடமொன்றுண்டு. "ஏரியல் ஷரோன்" படை வீரனாக இருந்த வேளையில் தான் விரும்புவதையும், நம்புவதையும் நடைமுறைப்படுத்த உத்வேகம் கொண்டிருந்தார். அதனால் மேலதிகாரிகளின் கட்டளைகளைப் பொருட்படுத்தாமல் உதாசீனம் செய்தார். யூதர்களுக்குத் தேவையானதும், அடிப்படையானதும் எதுவென்று தனக்குத் தெரியும் என்பது அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை! ஆகவே விசயங்களைத் தனது சொந்த வழியில் செய்து முடிக்க அவர் தனது பிரதமர் அலுவலகத்தைச் சுற்றியே அதிகார மையத்தைக், கட்டளை மையத்தைப் பலமாகக் கட்டமைக்க முயற்சி செய்ததில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

அவர் பிரதம மந்திரியாக அதிகாரத்தைக் கையிலெடுத்த வேளையில் பலஸ்தீனியப் பிரதேசங்களில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் நெருக்கடி மிகுந்த குழப்பமான சூழ்நிலை உருவாகிறது . இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் "ஏரியல் ஷரோன்" எவ்வாறு தனது போர்க்காலங்களில் வரம்பு மீறியும், அத்துமீறியும் செயற்பட்டாரோ அவற்றையே முன்மாதிரியாகக் கொண்டு செயற்படும் சூழ்நிலை உருவாகியது. ஏனெனில் தற்போது நாட்டின் தலைமைப் பதவியே அவ்வாறான நடவடிக்கைகளால் மேலெழுந்த ஒருவரின் (ஏரியன் ஷரோனின்) கரங்களில் உள்ளது. வயதில் குறைந்த இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவத்தினர், இளம் இடைநிலை இராணுவ அதிகாரிகள் தங்களது கட்டுக்குள் இருந்த பிரதேசங்களில் "ஏரியல் ஷரோனின்" சொந்த எடுத்துக்காட்டையே தூண்டியாகக் கொண்டு நடந்து கொண்டார்கள் என்று சொல்ல முடியும்.

"காஸாவிலிருந்து" இஸ்ரேலிய இராணுவத்தை மீளப்பெற்ற "ஏரியல் ஷரோன்", "மேற்குக் கரையில்" (West Bank) உயர்ந்த சுவர்களை வட்டவடிவில் நிறுவுவதன் மூலம் இஸ்ரேலிலிருந்து மேற்குக்கரையை முற்றாகப்

பிரிப்பு
பகுதி
இஸ்ரே
நிகழ்த்
பொரு
காப்ப
நிறுவு
சுவர்க
கற்பிக்

உண்
பின்ன
ரோன்"
தான் ச
மாயை
"காஸா
திருப்
அந்த
குடியே
பல யூ
வெளிே
வெளிே
உண்ை
நிகழ்த்

அத்
சமாதா
கபடம
ரோன்"
நடவடி
என்ற க
உலகின்
தோற்ற
"இஸ்ரே
கொண்
வரி வி
நடைமு
வாயில
பிரகட
இருக்கி

"ஏரி
ஆலோ
இவ்வா
பகுதி
பின்வா
ஆக்கிர
"காஸா
இழப்பு
இது சூ
தரப்பு
அடிப்
முன்னெ
அனைத்
பலஸ்தீ
மேற்செ
நோக்க
சமாதா
கள் என்
முறைய
வெளிப்
"ஏரியல்

"ஏரி
துறந்த
அடைய
திட்ட
பாதிக்க

# ஷரோன்

# ரா....?

பிரிப்புச் செய்கிறார். "மேற்குக் கரைப்" பகுதியிருந்து தற்கொலைக் குண்டுதாரிகள் இஸ்ரேலுக்குள் நுழைவதையும், தாக்குதல் நிகழ்த்தப்படுவதையும் கட்டுப்படுத்தும் பொருட்டு இஸ்ரேலியப் பொதுமக்களைக் காப்பதற்காகவும், இஸ்ரேலின் இறைமையை நிறுவுவதன் பொருட்டும் தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டதற்கு நியாயம் கற்பிக்கப்படுகிறது.

உண்மையில் இந்த முடிவுகளின் பின்னணியை ஆழமாக ஆய்ந்தால் 'ஏரியல் ஷரோன்' மிக இராஜதந்திரமாகச் செயற்பட்டுத் தான் சமாதானத்துக்குத் தயார் என்ற "போலி மாயை" ஒன்றைக் கட்டி எழுப்புகிறார். "காஸா" பகுதியிலிருந்து துருப்புக்கள் திருப்பி அழைக்கப்பட்டமையினால் அந்தப் பகுதியில் நடைபெற்று வந்த யூதக் குடியேற்றம் கட்டுப்படுத்தப்படுகிறது. பல யூதக் குடியேற்றங்களிலிருந்து வெளியேற மறுத்த யூதர்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுகிறார்கள். இது உண்மையில் யூதர்களின் நலன்களுக்காகவே நிகழ்த்தப்பட்டது.

அத்துடன் இஸ்ரேல் பலஸ்தீனர்களோடு சமாதானத்துக்குத் தயார் என்ற சுலோகத்தைக் கபடமாக அனைத்துலகின் முன் "ஏரியல் ஷரோன்" முன்வைத்திருந்தார். இத்தகைய நடவடிக்கைகளினால் "ஏரியல் ஷரோன்" என்ற கடும் யூதத் தீவிரவாதியொருவர் உலகின் கண்களுக்கு மிதவாதியாகத் தோற்றம் பெறுவதை நோக்கலாம். ஆனால் "இஸ்ரேல்" தொடர்ந்தும் "காஸாப்" பகுதிக்குக் கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு வரி விதிப்பதையும் ,பல்வேறு தடைகளை நடைமுறைப்படுத்துவதையும் அவதானிப்பதன் வாயிலாகக் காஸாப் பிரதேசம் தொடர்ந்தும் பிரகடனப்படுத்தாத இஸ்ரேலின் கட்டுக்குள் இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

"ஏரியல் ஷரோனின்" பிரதான ஆலோசகர்களில் ஒருவரான Dov Weissglass, இவ்வாறு உரைக்கின்றார்"காஸா" பகுதியிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்களைப் பின்வாங்குவதானது உண்மையில் ஆக்கிரமிப்பைக் கைவிட்டதாகாது. இன்னும் "காஸா" பகுதியின் கட்டுப்பாட்டை "இஸ்ரேல்" இழப்பதாகவும் அதனைக் கருதிவிடக் கூடாது. இது சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இரு தரப்பும் மேற்கொள்ளுகின்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் அல்லாது ஒரு தரப்பு முன்னெடுக்கும் நடவடிக்கையாகும். இது அனைத்துலக சமூகத்தின் கண்களில் "இஸ்ரேல்" பலஸ்தீனர்கள் தொடர்பாக விருப்புடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியாகவே நோக்கப்படும். அதே வேளை பாலஸ்தீனர்கள் சமாதான முயற்சிக்குத் தடையாக உள்ளார் கள் என்ற தோற்றப்பாட்டையும் எம் அணுகு முறையினால் அனைத்துலக சமூகத்திற்கு நாம் வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது. இதுவே "ஏரியல் ஷரோனின்" அடிப்படைத் திட்டம்.

"ஏரியல் ஷரோன்" மனித நேயங்களைத் துறந்த அப்பாவி மனிதர்களைத் துடைத்தழித்த அடையாளத்தையுடைய மனிதன்! அவரது திட்டமிடப்பட்ட தாக்குதல்களின் கீழ் பாதிக்கப்பட்ட லெபனிய மக்கள், பலஸ்தீன மக்கள் என்று வகைப்படுத்திச் செல்லலாம். "இஸ்ரேலிய" சமூகத்தையும், "சியோனிஸ" இயக்கத்தையும் பலஸ்தீனியர்களை நோக்கிய தடத்தில் மிக இருண்மையான அம்சங்களைப் போர்த்திக் கொண்ட வரலாற்றையுடைய மனிதனாக "ஏரியல் ஷரோன்" காட்சியளிக்கிறார்.

"இஸ்ரேல்" உருவாக்கப்பட்ட வேளையில் "நக்பா" என்ற அரபுச் சொல்லாடல் மிகப் பிரசித்தமானதொன்று! 1947க்கும் 1949க்கும் இடையில் ("இஸ்ரேல்" என்ற நாடு உருவாகிய காலகட்டம்) ஏழு இலட்சத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீன மக்கள் தப்பியோடியோ , வெளியெற்றப்பட்டோ நிகழ்ந்த மானுடத் துயரத்தை, மாபெரும் மக்கள் இடப்பெயர்வை "நக்பா" என்ற அரபுச் சொல்லால் அழைப்பார்கள்.

"இஸ்ரேல்" என்ற நாடு நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் "நக்பா" என்ற துயர நாடகத்தை அரங்கேற்றியவர் "பென் குரியன்" என்ற , "இஸ்ரேலின்" முதல் பிரதம மந்திரி! அவரை வரலாற்றாசிரியர்களும், மனித உரிமையியலாளர்களும் மத்திய கிழக்கில் மானுடத்துக்குத் தீங்கு விழைவித்த முதல் "போர் குற்றவாளி" என்று பிரகடனம் செய்வார்கள். அந்த வரிசையில் அதே அரசியல் விமர்சகர்களால் "இரண்டாவது போர் குற்றவாளி" என்று பட்டியலிடப்படுகிறார் இந்த "ஏரியல் ஷரோன்". .

"ஷரோன்" பொய்கள் நிறைந்த, சூழ்ச்சித்திறன் வாய்ந்த, கபடம் கொப்பளிக்கும் இராணுவத் தளபதி! அரசியலிலும் "ஷரோன்" இவ்வாறான அனைத்துத் திறன்களையும் ஒருங்கே குவித்துச் செயற்படும் சாணக்கியம் கொண்டிருந்தமை இஸ்ரேலுக்குள் உள்ளிருந்த அரசியலாளர்களைக்கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இலஞ்ச ஊழல்கள், பண மோசடிகள் என்று "ஷரோன்" அகப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்ட பின்பும் அதிகாரத்தையும், பதவிகளையும் மிகச் சுலபமாகக் கையாளுபவராக இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலில் வாழும் யூத இடதுசாரிகளுக்குள் இவ்வாறான ஒரு பேச்சு இருந்து வந்துள்ளது. என்றோ ஒரு நாள் "ஷரோன்" பிரதமரானால் தாங்கள் எல்லோரும் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்பதே அது! ஆனால் அது உண்மையில் நிகழ்ந்த போது , யாரும் நாட்டை விட்டு வெளியேறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மிகச் சிலரே வெளியேறினார்கள்தான். காலம் செல்லச்செல்ல, நினைவுகள் மங்க "ஷரோன்" அணிந்திருந்த புதியவகை "மிதவாதப் பாத்திரப் போர்வை" இடதுசாரிகளின் பயத்தைப் போக்கிவிட்டதென்றே கருத வேண்டியுள்ளது. இந்த மிதவாதப் போக்கினை "ஷரோன்" பிரதமராவதற்கு முன்பே வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டார்.

பழையவற்றை மன்னித்துப் புதியவற்றைக் கருத்தில் கொள்ள முனைகின்ற நிதானமான ஓர் நபர் என்ற கருத்தியலை "ஷரோன்" கட்டமைக்க முன் நிகழ்ந்த ஒரு மிக முக்கிய விடயத்தினை நாம் இங்கு எடுத்துக் கொள்ளலாம். "எகுட் பாரக்" பிரதம மந்திரியாக இருந்த போது "அல் அக்சா" மசூதி மீது பாலஸ்தீனியர்களுடனான வன்முறை மோதலைத் தூண்டும் வகையில் "ஷரோன்" மிகப்பெரும் மோதலுக்கான அடித்தளத்தை அமைத்துச் சென்றார். அதனால் உணர்ச்சிவசப்பட்ட , ஆத்திரமூட்டப்பட்ட பலஸ்தீனியர்கள் இரண்டாம் Intifada கிளர்ச்சியை ஆரம்பிக்க வழிவகுத்த முக்கிய காரணிகளில் இதுவும் ஒன்றாக அமைந்தது . ஏனெனில் இந்த இரண்டாம் கட்ட "இன்டிபடா" வெடித்தவுடன் "இஸ்ரேலின்" பாதுகாப்பு என்ற பிரச்சினை முக்கியத்துவம் அடைகிறது. எனவே அந்தச் சந்தர்ப்பத்தில் "இஸ்ரேலிய" மக்களுக்குத் தங்களைக் காப்பாற்றும் இரட்சகனாகக் காட்சி தருகிறார் "ஷரோன்". ஆகவே அவரால் தேர்தலில் வெற்றி பெற முடிந்தது.

இஸ்ரேலின் வலதுசாரித் தீவிரவாதக் கட்சியான "லிகுட் கட்சி" "காஸா" பகுதியிலிருந்து துருப்புக்களை வரவழைத்துக் கொண்டு மேலும் முன்னோக்கிச் செல்லத் தயாராக இல்லை, அதனால்தான் "ஷரோன்" மிகவும் புத்திசாலித்தனமான உத்திகளோடு "கட்டிமா" கட்சியை உருவாக்கியிருந்தார். இதனைப் பெரும்பாலும் ஒரு குறியீட்டு விடயமாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் குறியீட்டு நடைமுறையை நன்றாகப் புரிந்து கொண்டு அரசியல் சதுரங்கத்தில் காயை நகர்த்தும் வேலையை "ஷரோன்" கச்சிதமாகக் கையாண்டிருந்தார்.

ஆனால் இந்தச் சமாதான முன்னெடுப்புகளை ஊக்குவிக்கும் அல்லது பலஸ்தீனியர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் கட்சி அல்ல "ஷரோனின்" "கட்டிமா" கட்சி! ஆனால் நடைமுறையில் ஆக்கிரமிப்பை நாசூக்காக அனைத்துலக சமூகத்தைச் சாந்தப்படுத்திக்கொண்டு தொடர்வதே "கட்டிமா" கட்சியின் உத்தி! "ஷரோன்" "கட்டிமா" கட்சியை வலதுசாரித் தீவிரவாதக் கட்சியான "லிகுட்" கட்சியினுள் முரண் அணியிலிருந்தவர்களை வைத்துக் கட்டியதால் "மத்தியத்துவ வாதக் கொள்கை" கொண்ட கட்சியாகக் கருதப்பட்டது. அவ்வாறு சொல்லவும் பட்டது.

2005இல் "ஷரோன்" "காஸா" பகுதியிலிருந்து 8,000 குடியிருப்பாளர்களை விலக்கிக் கொண்டார். ஆனால் "மேற்குக் கரையில்" அவர் இணைத்துக் கொண்ட புதிய குடியிருப்பாளர் களின் தொகை 20,000. இதிலிருந்து "ஷரோன்" 2005இல் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனியப் பிரதேசங்களில் அனைத்துலகச் சட்டவிரோத யூதக் குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையைப் 12,000 பேர்களினால் அதிகரித்துள்ளார் என்பது தான் உண்மை நிலை! ஆனால் அனைத்துலக ஊடகங்கள் இது குறித்துக் கவலைப்படவோ, அலட்டிக் கொள்ளவோ இல்லை.


ஏழு ஆண்டுகள் தொடர்ச்சியாகக் "கோமா" நிலையில் இருந்து வந்த "ஷரோனின்" மரணம் இன்று இஸ்ரேலிய அரசியலில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. பக்கவாதம் ஏற்பட்டுக் "கோமா" நிலைக்குச் செல்பவர்கள் நெடுநாள் உயிர் வாழ்வதில்லை. ஆயினும் "ஷரோனின்" குடும்பத்தவர்களின் வற்புறுத்தலில் "உயிர் காக்கும் கருவிகளின்" துணையுடன் நினைவிழந்த சடலமாக வீழ்ந்து கிடந்த "ஷரோனின்" யானை போன்ற உடலம் மீளாத் துயிலை அடைந்து விட்டது. ஆயினும் "ஷரோனின்" வாழ்வும் , வரலாறும் மத்திய கிழக்கு அரசியலில் தொடர்ந்தும் பேசு பொருளாகவே இருக்கப் போகிறது. .

"இஸ்ரேலிய" சமூகத்தின் மற்றும் "சியோனிச" இயக்கத்தின் இருண்ட அம்சங்களை மிகக் காட்டமாக அடையாளப்படுத்துபவராக விளங்கிய குறியீடாக இஸ்ரேலிய இடதுசாரிகள் "ஷரோனை" எண்ணுகிறார்கள். இடதுசாரிகள், மாற்றுக் கருத்தாளர்கள் மத்தியில் இன்னுமொரு நம்பிக்கை காத்திருந்ததாக சில விமர்சனக் குரல்கள் அளவிடுகின்றன. அது "ஷரோனின்" போர் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்கிறது.

இஸ்ரேலின் வரலாற்றில் வன்முறையை வெறி கொண்டு வெளிப்படுத்திய இரண்டாவது கொடிய மனிதராகவும், மனிதத்துவத்திற்கு எதிரான இரண்டாவது போர்க் குற்றவாளியாகவும் "ஷரோனை" சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமென்று கருதும் யூதர்கள் இஸ்ரேல் என்ற நாட்டுக்குள்ளும் இருக்கின்றார்கள்.

(19ஆம் பக்கம் பார்க்க)







மாரி - 2 மூலம் பிரபலமானவர் சாய்பல்லவி. இப்போது சூரியாவுடன் என்.ஜி.கே., பகத்பாஸிலுடன் அதிரன் படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் கன்னட மொழிப் படத்தில் அறிமுகமாகவுள்ளார். பெரும் பொருட்செலவில் உருவாகும் இந்தப் படத்தின் கதை நாயகியை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.


தமிழ் சினிமாவின் புதுவரவு பலக் லால்வாணி. தெலுங்கு அவருக்கு கைகொடுக்காத நிலையில் தமிழுக்கு வந்தார். தமிழில் அவர் அறிமுகமான "சகா" படம் வெளியாகவில்லை.

இந்நிலையில், ஜீ.வி. பிரகாஷுடன் அவர் நடிக்கும் குப்பத்துராஜா படத்தில் நடித்துள்ளார். இதில் அவர் சென்னையின் சேரி பெண்ணாக நடித்துள்ளார். இப்படத்தை நம்பிக்கையுடன் காத்திருக்கிறார் லால்வாணி.

"அசுரன்" படத்தில் அப்பா - மகன் என இரு வேடங்களில் நடிக்கிறார் தனுஷ்.

இப்போது புதிய படம் ஒன்றிலும் அப்பா - மகன் என இரு வேடங்களில் நடிக்கிறார். இதில் அப்பா தனுஷுக்கு ஜோடியாக சினேகா நடிக்கிறார்.

இந்தப் படத்தை துரை செந்தில்குமார் இயக்குகிறார். இவர்தான் தனுஷை இரு வேடங்களில் கொடி படம் மூலம் இயக்கியிருந்தார்.



ஸ்ருதி ஹாசன், தமிழ் திரையுலகின் ஆளுமையின் மகளாக இருந்தாலும் தனக்கெனத் தனியான அடையாளத்தை ஏற்படுத்தியவர்.


தற்போது படங்கள் எதிலும் நடிக்கவில்லை என்றாலும் சமூகவலைத்தளங்களில் தீவிரமாக இருக்கிறார். அவரின் இன்ஸ்ராகிராமில் அவரைப் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியைத் தொட்டுள்ளது.

சமூகவலைத்தளங்கள் மூலம் கவர்ச்சி காட்டுவதில் இப்போது பல நடிகையரிடையே போட்டி உண்டு. காரணம் இதை வைத்துப் பட வாய்ப்புகளை பிடித்துவிடலாம் என்பதாலும்தான்.

கோ படம் மூலம் தமிழில் அறிமுகமான பியா ஜீன்ஸ் குறையாக அணிந்து உள்ளாடையுடன் நிற்கும் படத்தை சமூகவலைத்தளத்தில் பதிந்துள்ளார். அவரின் இந்தக் கவர்ச்சிக்கு பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

சிவகார்த்திகேயனின் "மிஸ்டர் லோக்கல்" படம் மே முதலாம் திகதி வெளிவரவுள்ளது. தவிர, "இரும்புத்திரை" இயக்குநர் மித்ரன் இயக்கத்திலும் ஒரு படத்தில் நடிக்கிறார்.

அடுத்து, விக்னேஷ் சிவன் இயக்கும் படத்தில் நடிக்கிறார். இந்தப் படத்திற்கு எல்.ஐ.சி. (லைப் இஸ் கலர்புல்) எனப் பெயரிட்டுள்ளனர். இந்தப் படத்தில் சிவகார்த்திகேயனுக்கு இரு நாயகிகள்.







"பொன்னியின் செல்வன்" காவியப் படத்தை விரைவில் இயக்கவுள்ளார் மணிரத்தினம். இதை 200 கோடி இந்திய ரூபா செலவில் இப்படத்தை லைகா தயாரிக்கிறது.

அமிதாப்பச்சன், ஜெயம் ரவி, விக்ரம், ஐஸ்வர்யாராய் என நடிகர்கள் தேர்வு நடக்கிறது. இந்நிலையில் குந்தவை நாச்சியார் வேடத்தில் கீர்த்தி சுரேஷ் நடிக்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ‘எரிமலை’ அரசியல் நாவல் குறித்தான பார்வை

■ கே.எஸ்.சுதாகர்




கடந்த இருபது வருடங்களாக ‘ஞானம்’ சஞ்சிகை இலங்கையிலிருந்து வெளிவருகின்றது. இதன் ஆசிரியர் தி.ஞானசேகரன் ஏற்கனவே ‘புதிய சுவடுகள்’, ‘குருதி மலை’, ‘லயத்துச் சிறைகள்’ போன்ற நாவல்களைத் தந்தவர். ‘எரிமலை’ நாவல் ‘ஞானம்’ பதிப்பகத்தின் 53ஆவது வெளியீடாக வருகின்றது.

ஈழப்போராட்டம் எழுச்சி கொண்டு, பின்னடைவாகிப் போய்விட்ட தற்போதைய நிலையில், நடந்து முடிந்துவிட்ட சரித்திர நிகழ்வுகளின் ஒரு காலகட்டத்தை இந்தநாவல் பேசுகின்றது. இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை அனேகமாக இன்று எல்லோருக்கும் தெரிந்துவிட்ட நிலையிலும், இதற்கு முன்னர் பல படைப்புகள் வந்துவிட்ட நிலையிலும் இந்த ‘எரிமலை’ நாவல் புதிதாக என்ன சொல்லிவிடப் போகின்றது என நினைத்துக் கொண்டு நாவலைப் படிக்க ஆரம்பித்தேன்.

‘ஈழப்பிரச்சினை’ எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதன் உட்சூக்குமம் பொதுவாகப் பலருக்கும் தெரிந்திருக்கவில்லை. அதையே இந்தநாவல் பேசுகின்றது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த 1948ஆம் ஆண்டுதான் தமிழர்க்கான பிரச்சினைகளின் தொடங்குபுள்ளியும் ஆகும். போர்த்துக்கீசரின் வருகையிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரைக்குமான காலஇடைவெளியில் உறைந்து கிடக்கும் உண்மைகளை நாவல் ஆராய்கின்றது.

முதலில் எங்கே சறுக்கல் ஆரம்பித்தது? அதன் பின்னர் நாம் விட்ட பிழைகள் என்ன என்பவை பற்றித் தெரிந்துகொண்டு அதிலிருந்து புதிதாக என்னசெய்யலாம் என்பது பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றது. ஒரு எழுத்தாளர் எந்த ஒரு கட்சியின் சார்பற்றும் இருக்கும்போது, அவரது படைப்புகளில் ஒழிப்புமறைப்புகள் இருக்காது நடுநிலைபேணும் தன்மை காணப்படும். அதுவும் இந்த நாவலில் ஒரு சிறப்பு எனலாம்.

84ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்த நாவல் சூழ்நிலை சரியில்லாத காரணத்தால் 35 வருடங்கள் கழித்து தற்போது (2018)




வெளிவருவதாக நாவலாசிரியர் தனதுரையில் குறிப்பிடுகின்றார். காலம் தாழ்த்தி வந்தாலும் இனப்பிரச்சினையை சரியானதொரு கூர்ந்த அணுகுமுறையில் சொல்லிச் செல்கின்றது நாவல். தேர்ந்தெடுத்த பாத்திரங்கள் உரையாடலை நகர்த்திச் செல்ல கை கொடுக்கின்றது. அத்துடன் நாவலின் களம் அற்புதமாக வெளிப்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு ஒரு இளைஞன் தன்காலில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்காயத்திற்கு சிகிச்சைபெற, தன் இரு கூட்டாளிகளுடன் டொக்டர் மகேசனின் வீட்டிற்கு வருவதில் இருந்து கதை ஆரம்பிகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)



# தனியொருத்தி

ச.கிருஸ்ணா

இசை ரசிகனாக வாசிக்க ஆரம்பித்து, ஸ்வர்ணலதாவின் ரசிகனாக ஆழ்ந்து, பிரக்ஞைகளால் ஸ்வர்ணலதாவாகவே மாறிப் பூரித்துப்போய்தான் இந்தப் புத்தகத்தை முடிக்க வேண்டியிருந்தது. 90களில் பதின்மத்தை எட்டிப்பார்த்த எனக்கு இந்தப் புத்தகத்தின் வரிகளை எழுத்துகளாக பார்த்து வாசிக்க இயலவில்லை. மாறாக எத்தனையோ எண்ணப்படிமங்களைக் கிளறி ரைம்மிஷினில் ஏறிவிட்டதைப்போன்ற மயக்கத்தை உணரச்செய்தது. ‘தனியொருத்தி’ என்ற இந்தப் புத்தகத்தில் ஆசிரியர் நாடோடி இலக்கியன் (பாரி) ஒரு பாடலை நெருங்கும் துல்லியமான அணுகுமுறை என்னை ஆச்சரியப்படுத்திக்கொண்டே இருந்தது.

பாடலின் சூழல், வரலாறு, பாடலின் நதிமூலம், அது வெளிவந்த வருடத்தின் ரசிக மனநிலை, பாடலில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள், வார்த்தைகளின் மாத்திரை அளவுகள், தாளக்கட்டு, வார்த்தைகளின் செறிவு, ஸ்தாயி, குரலின் தொனி, பிற பாடலோடு ஒப்பீடு, அந்தப் பாடலுக்கான மாற்று இந்தப்பாடலென்ற கணிப்பு, ஒரு பாட்டை எப்படி அணுகலாம் என்ற அவதானிப்பு, இப்படி இருக்கலாம் என்ற நம்பிக்கை... ஆகா அவரது தேடல் வியக்க வைக்கிறது. தனியொருத்திக்கான புத்தகமாயிருந்தாலும் ஸ்வர்ணலதாவின் வாழ்வில் தன் இசைப்பயணத்தில் சந்தித்த எந்த ஜீவனும் இதில் விடுபடவில்லை. இசையமைப்பாளர் வாரியாக பிரிக்கப்பட்ட ஒவ்வொரு தொகுப்பின் தலைப்பும் அந்தந்த இசையமைப்பில் உள்ள பாடலின் பெயராக இருப்பதே கவிதையாய் இருக்கிறது.

பாடகர்கள் சுரேந்தர், அருண்மொழி, சுனந்தா, கிருஷ்ணசந்தர் இசையமைப்பாளர்கள் சௌந்தர்யன், ஸ்வரராஜ், மகேஷ், ஆகோஷ், சுரேஷ் பீட்டர் என மறக்கப்பட்ட யாவரும் புத்தகத்தில் மறக்கப்படவில்லை. பாடலாசிரியர்கள் எவரும் விடுபடவில்லை. தனியொருத்தியில் கையாளப்பட்டிருக்கும் உவமைகள் சொல்லி முடியாது... ஆலாபனை போன்று பாடலில் ஒரு வார்த்தை திரும்பத் திரும்ப பயன்படுத்தப்படும் போது வசமாகும் லாவகத்தை தேர்ந்த ஓவியனின் தூரிகை வீச்சோடு ஒப்பிட்டவனை சாமானியனென்று கடக்க முடியுமா?

எத்தனை ஆச்சரியங்கள்... எத்தனை ஒப்பீடுகள்... எஸ்.பி.பி ... ஜேசுதாஸ் ஒப்பீடு, மணமகளே மணமகளே... தூது செல்வதாரடி... வந்தாள் புகுந்த வாசல் விளங்க பாடல்கள் ஒப்பீடு, போறாளே பொண்ணுத்தாயி... திருமண மலர்கள் பாடலின் ரசனையான ஒப்பீடு. அதுபோல இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான், ஜேசுதாஸ், எஸ்.பி.பி, மனோ, சிற்பி, வைரமுத்து ஆகியோரை சிலாகித்திருப்பதெல்லாம் வார்த்தைகளுக்குள் அடங்காதவை. ‘உசிலம்பட்டி பெண்குட்டி’ பாடலை விவரித்த வரிகள் ஒலி வடிவம் பெற்று ஒலிக்க ஆரம்பித்த நொடியில் புல்லரித்துப்போனேன்.

இலங்கை வானொலியில் பாடல் கேட்டு வளர்ந்த சிறுவனாகச் சொல்கிறேன் ‘தட்டான் கெடைக்கலையோ’ பாடலை முதன் முதலாய் இன்று யூ - ரியூபில் தேடிக் கேட்டு ஸ்வர்ணலதாவின் குரலுக்கு நான் சிந்திய கண்ணீர் துளியினையே இந்த புத்தகத்தின் விமர்சனமாக வைக்கிறேன்.




உங்கள் ஆக்கங்களை ‘வாசிகை’ , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

# அமைதியை வளர்த்தெடுத்தல்



அமைதியை வளர்க்கவென
பெரும் விழா எடுத்து வெண்புறாக்களை
ஆகாயத்தில் பறக்க விடுகின்றனர்
பிரசித்தமான தலைவர்கள்
அதன் ஒய்விலாச் சிறகடிப்பினில்
சமாதானத்தை மலரச் செய்திருக்குமா?
அதற்காகத் தன்னை
மன நிறைவோடு அர்ப்பணித்திருக்குமா?
அன்றி வேடனின்
குறிதவறா அம்பிற்கிரையாகி
நிலமெல்லாம் ரத்தம் சிந்தி
சிறகினை நிலத்திலடித்துச் செத்திருக்குமா?
தானியங்களுக்குப் பழக்கப்பட்டு வளர்ந்த
இடத்தினை மீளடைந்திருக்குமா?
என்பதெல்லாம் தலைவர்களுக்குத்
தெரிந்திருக்க நியாயமில்லை
ஆனால் அவர்கள் புறாக்களைப் பறக்கவிடும்
ஒவ்வொரு தருணமும்
பெரிதாக என்ன நிகழ்ந்துவிடப் போகிறது?
பிரபஞ்சத்தின் ஏதோவோர் மூலையில்
எண்ணற்ற உயிர்கள்
திட்டமிட்டுக் கொல்லப்படுவதையும்
அதற்கான திட்டங்கள் தீட்டப்படுவதையும்
தவிர

- ஜமீல்

# இணையத்தை வரையறுங்கள் அரசுகளுக்கு மார்க் அழைப்பு

உலகம் முழுவதும் சமூக வலைதளங்களின் பயன்பாடு ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதில் பேஸ்புக் நிறுவனத்தின் பங்களிப்பே அதிகளவில் இருக்கிறது. இன்ஸ்டாகிராம், வட்ஸ்அப் போன்றவற்றையும் தன் கைவசம் வைத்திருக்கிறது பேஸ்புக். சமீபகாலமாகச் சமூக வலைதளங்கள் மூலமாக நடைபெறும் குற்றங்கள் பெருகிவருகின்றன என்ற குற்றச்சாட்டுப் பரவலாகக் கூறப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார் பேஸ்புக்கின் நிறுவனர் மார்க் சக்கர்பெர்க். பிரபலமான நாளிதழான தி வாஷிங்டன் போஸ்ட்டில் அவர் தெரிவித்த கருத்துகள் வெளியாகியுள்ளன. அதில் இணையத்தில் காணப்படும் முக்கியமான நான்கு விடயங்களுக்கு புதிய வரைமுறைகளை வகுக்க வேண்டும் என்ற கருத்தை முன் வைத்திருக்கிறார் அவர்.

**முறைப்படுத்த வேண்டிய நான்கு விடயங்கள்**

இணையத்தில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்கள், தேர்தல் தொடர்பான விடயங்கள், தனியுரிமை மற்றும் டேட்டா பாதுகாப்பு என நான்கு விடயங்களை முறைப்படுத்த வேண்டும் என மார்க் சக்கர்பெர்க் கருத்து தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

“பேஸ்புக் அனைத்து மக்களுக்கும் நன்மையைக் கொடுக்கும் வகையிலான பொதுவான ஒரு தளத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இங்கே அவர்கள் தாராளமாக அவர்கள் கருத்தைத் தெரிவிக்கலாம். அதேநேரம் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் விடயங்களிலிருந்து பாதுகாக்கவும் எங்களுக்குக் கடமை இருக்கிறது“ என்கிறார் மார்க்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் நகரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு மார்க் இது தொடர்பாகக் கருத்து தெரிவித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. தாக்குதல் நடத்திய நபர் துப்பாக்கிச் சூட்டை பேஸ்புக் நேரலையில் ஒளிபரப்பு செய்ததால் அது பலரால் பார்க்கப்பட்டது. அதுபற்றி பின்னர் கருத்து தெரிவித்த பேஸ்புக் அவற்றை உடனடியாக நீக்கிவிட்டதாகத் தெரிவித்தது. ஆனால் அது நீக்கப்படும் முன்னரே பலரால் பார்க்கப்பட்டிருந்தது.

இதுபோன்ற தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களுக்காக அது பரவும் தளங்களே பொறுப்பாக வேண்டும் எனக்கூறும் அவர், இதுபோன்ற விடயங்கள் பரவுவதைத் தடுக்க அனைத்துச் சமூகவலைதளங்களும் ஒன்றிணைய வேண்டும். அதற்காக அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுவான விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார்.

**தனியுரிமை & டேட்டா**

அடுத்ததாக மார்க் சக்கர்பெர்க் தெரிவித்த கருத்து தேர்தல் தொடர்பானது. இன்றைக்கு உலகம் முழுவதிலும் நடக்கக் கூடிய தேர்தல்களின் முடிவைத் தீர்மானிப்பதில் சமூக வலைதளங்களின் பங்கு அதிகமானது. கடந்த சில வருடங்களில் பேஸ்புக்குக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திய கேம்ப்ரிட்ஜ் அனாலிடிகா விவகாரம் தேர்தல் தொடர்பானதுதான். அதற்குப் பிறகு தனது தேர்தல் விளம்பரம் தொடர்பான நிபந்தனைகளில் பெரிய அளவில் மாற்றம் செய்தது பேஸ்புக்.

பயனாளர்களுக்குக் காட்டப்படும் அரசியல் கட்சிகளின் விளம்பரங்களுக்கும் கட்டுப்பாடுகளை விதித்தது. உலகம் முழுவதுக்கும் தேர்தலின் உண்மைத் தன்மையைப் பாதுகாக்கும் வகையில் வலுவான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்கிறார். அடுத்ததாக தனியுரிமை மற்றும் டேட்டாவைப் பாதுகாப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்து மார்க் தெரிவித்திருக்கும் கருத்து மிக முக்கியமானது.

“தனிநபர் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் ஐரோப்பிய யூனியன் கடந்த வருடம் அமல்படுத்திய புனீசு விதியைப் போன்று பிற நாடுகளும் பொதுவான ஒரு சட்டத்தை உருவாக்கி அமுல்படுத்த வேண்டும்” என மார்க் விருப்பம் தெரிவித்திருக்கிறார். இதேபோல “தங்கள் தகவல்களை ஒரு நிறுவனத்திடம் அளிக்கும் மக்கள் அதை அவர்கள் விரும்பும் போது மற்றவர்களுக்கும் மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்” என்ற கருத்தையும் மார்க் முன்வைத்திருக்கிறார்.

உலக நாடுகள் முழுவதுக்கும் தேர்தல், தனியுரிமை, டேட்டா பாதுகாப்பு எனப் பல்வேறு விடயங்களில் ஒரே மாதிரியான சட்டங்கள் நடைமுறைக்கு வந்தால் சமூக வலைதளங்களைப் பயன்படுத்தும் மக்களுக்கான உரிமைகள் அதிகரிக்கவே செய்யும். அதே நேரத்தில் பேஸ்புக் போன்ற நிறுவனங்களுக்கு அதனால் சுமை அதிகரிக்கலாம். இந்நிலையில் மார்க் சக்கர்பெர்க் இப்படிக் கருத்து தெரிவித்திருப்பது பல தரப்பினருக்கும் ஆச்சரியத்தை அளித்திருக்கிறது.

---

# எரிமலை...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

டொக்டர் மகேசனும் அவரது மனைவி டொக்டர் மாலாவும் தனியார் மருத்துவமனை ஒன்றை நிர்வகித்து வருகின்றார்கள். தனியார் மருத்துவமனை அவர்களின் வீட்டிற்கு அருகாமையில் இருக்கின்றது. சம்பவம் நடந்த மறுநாள் மகேசனின் தம்பி சந்திரனும், அவனது சிங்கள நண்பர்கள் விமல்சிறி (பிஸ்னஸ் மனேஜ்மண்ட் கொன்சல்டன்), அவரது மனைவி (சமூகவியல்துறை பேராசிரியர், எழுத்தாளர்), மனைவியின் தங்கை அனுலா (ஸ்டெனோ) ஆகியோர் வர இருக்கின்றார்கள். இப்படியான இக்கட்டான சந்தர்ப்பத்தில், துப்பாக்கிமுனையின் நெருக்குதலில் கதை விறுவிறுப்பாகத் தொடங்குகின்றது.

ஆரம்பத்திலேயே சந்திரனுக்கும் அனுலாவிற்கும் காதல் இருப்பதை அனுமானிக்க முடிகின்றது. ஒருபுறம் காயப்பட்டவன், மறுபுறம் விருந்தாளிகள். இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவிக்கின்றார்கள் மகேசனும் மனைவியும்.

டொக்டர் குடும்பத்தினருக்கு சமையல், கார் டிரைவர் எனப் பல தொட்டாட்டு வேலைகள் செய்துவருபவர் இந்திய வம்சாவளியான மாரிமுத்து. அவரது உதவியுடன் கராச்சிற்குப் பக்கத்தில் இருக்கும் அறையில் காயப்பட்டவனை இரகசியமாகப் பராமரிக்கின்றார் டொக்டர் மகேசன்.

காயப்பட்டவன் பாலா மருத்துவம் படிப்பதற்குத் தகுதி இருந்தும், 1971 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த தரப்படுத்தல் காரணமாக பல்கலைக்கழகம் செல்லமுடியவில்லை. அதன் பின்னர் மாணவர் பேரவையில் சேர்கின்றான். சிறை செல்கின்றான். சித்திரவதைகளுக்கு ஆளாகின்றான். பின்னர் போராடப் புறப்படுகின்றான்.

செல்லையா மாஸ்டர் நாவலில் வரும் இன்னொரு முக்கிய பாத்திரம். அவர் சாத்வீகம் சார்ந்தும், அவரது மகன் தனபாலன் ஆயுதப்போராட்டம் சார்ந்தும் கதைப்பது குடும்பத்திற்குள்ளேயே அரசியல் மாற்றங்கள் நிகழ்வதைக் காட்டுகின்றது. நீண்டதொரு அரசியல் வரலாற்றில் கட்டம்கட்டமாக நடந்த சம்பவங்கள் (இயக்கர் - நாகர், விஜயனின் வருகை, இந்தியத் தமிழர்களின் வருகை, அவர்களின் வாக்குரிமை ஏன் பறிக்கப்பட்டது என்பதற்கான காரணங்கள், இந்து - புத்தமத ஒற்றுமை, தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், தனிச்சிங்களச்சட்டம், சேகுவேரோ இயக்கம், 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாடு, யாழ்ப்பாண நூலக எரிப்பு) நாவலில் உரையாடல் மூலம் சொல்லப்படுகின்றன. ஒருகாலத்தில் திண்ணை, மரத்தடியில் நாலு பேர்கள் சந்தித்து கதைத்து விவாதித்தது போக, பின்னர் கதைப்பதற்கே நேரமின்றி ஓடிஓடி இடம்பெயர்ந்ததும் அல்லல்பட்டதும் நினைவிற்கு வருகின்றன.

நான் இதற்கு முன்னர் வாசித்த பெரும்பான்மையான நாவல்களில் 1983 ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரம் தான் முதன்மை பெற்றிருந்தது. இந்தநாவல் 1983ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்தைத் தொடர்ந்த, அடுத்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கின்ற போதிலும் அவை பற்றிய தகவல்கள் பெரிதும் இல்லை. 1977 இல் நடந்த இனக்கலவரம் பற்றிய தகவல்களே மிகுந்து காணப்படுகின்றன. 1977 இல் டொக்டர் மகேசனும் மனைவியும் அனுராதபுரம் அரசினர் மருத்துவமனையில் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். அந்த இனக்கலவரத்தின் பின்னர் அவர்கள் வேலையை ராஜினாமாச் செய்து விட்டு யாழ்ப்பாணத்தில் தனியார் மருத்துவமனை ஒன்றை ஆரம்பித்திருந்தார்கள். அதுவும் ஒருகாரணமாக இருக்கலாம்.

‘எல்லாளனுக்கும் துட்டகைமுனுவிற்கும் இடையேயான யுத்தம் ஒரு இனவாத போராட்டமல்ல’, ‘ஆங்கிலேயர் ஆட்சியின் பின்னரே பிரிவினைகள் தோன்றின’, ‘சமஷ்டி அரசியலமைப்புத் தான் இலங்கைக்கு சிறந்தது என்ற கோரிக்கையை சிங்களவர்களே முதலில் வைத்தார்கள்’ போன்ற குறிப்புகள் நாவலில் வருகின்றன. நாவலின் முடிவில் வரும் கிழவி பாத்திரம் மனதில் நின்று விடுகின்றாள். அவளே நாவலை சுமுகமாக நிறைவும் செய்கின்றாள்.

புகைந்து கொண்டிருக்கும் எரிமலை - 1958, 1977, 1983 எனப் பல தடவைகள் சீற்றம் கொண்டிருக்கின்றது. கடைசியாக 2009 இல் சீற்றம் கொண்ட போது எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டுவிட்டது. நாவலை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தால் - சிங்கள மக்களும், புலம்பெயர்ந்தவர்களின் இளம்சந்ததியினரும், பிற இனத்தவரும் வாசித்துப் புரிந்து கொள்ள முடியும். மற்றும் 1984ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட நிகழ்வுகளை நாவலின் இரண்டாம் பாகமாக எழுதி நிறைவு செய்யவேண்டும் என்பது என் பெருவிருப்பாகும்.



புதுவிதி 100 ஆவது இதழை முன்னிட்டு நடத்திய மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை.

# ஜனநாயக அரசின் பலமும் பலவீனமும்

ஆதி மனிதன் தனக்கு தேவையான விடயங்களை தானாகவே உற்பத்தி செய்து வாழ்ந்து வந்தான். பின்னர் மனித தேவைகளும் விருப்பங்களும் அதிகரித்து சென்றதன் காரணமாக மனிதன் ஏனையோரிடம் இடைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான். மனிதன் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அரசு தோற்றம் பெற்றது.

இன்றைய அரசுகளில் ஜனநாயகம் மிகவும் முக்கிய ஒரு விடயமாக மாறியுள்ளது. ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சியை கூறலாம் ஜனநாயகம் மறைமுக ஜனநாயகம், நேரடி ஜனநாயகம் என இரண்டு வகை. ஜனநாயகமானது மூன்று முக்கிய விடயங்களை கொண்டுள்ளது.

1. சமத்துவம்
2. மக்கள் இறைமை
3. சுய ஆட்சி

என்பவையாகும் மக்கள் இறைமை என்பதன் பொருள் யாதனில் ஜனநாயகமானது ஒரு அரசியல் முறை என்பதும் அதில் மக்கள் தமக்குரிய அதிகாரத்தினை தங்களைத் தாங்களே ஆளும் அளவுக்குச் செயற்படுத்தாது தம்மை ஆளுவோரை மாற்றியமைக்கும் அளவுக்கே செயற்படுத்துகிறார்கள். இவ்வாறான ஜனநாயக ஆட்சி தொடர்பான சிந்தனைகள் காலத்துக்கு காலம் மாற்றமடைந்து வந்திருப்பதை காணலாம்.

கிரேக்க நகர அரசுகளில் ஆரம்பித்த நேரடி ஜனநாயகம் பின்னர் சனத்தொகை பெருக்கம், நிலப்பரப்பின் விரிவாக்கம் என்பவற்றினால் பிரதிநிதித்துவ ஜனநாயகமாக மாற்றியமைக்கப்பட்டது. மக்கள் தமது அரசியல் செயற்பாடுகளை தமது பிரதிநிதிகள் ஊடாக நிறைவேற்ற முனைவதையே இப்பிரதிநிதித்துவ ஜனநாயகம் குறிக்கின்றது. இருப்பினும் காலப்போக்கில் இப்பிரதிநிதித்துவ ஜனநாயகம் சிந்தனையில் சிறிய மாற்றம் ஏற்படலாகியது. அம் மாற்றம் மூன்றாம், நான்காம் மண்டல நாடுகளை மையப்படுத்தி தோற்றம் பெற்ற தேசிய சிறுபான்மை இனங்களின் விடுதலைப் போராட்டத்தினால் பங்குபற்றல் ஜனநாயகம் என்றதொரு ஜனநாயக சிந்தனையை தோற்றுவித்தது.

ஜனநாயகம் சுதந்திரத்துடன் சட்டத்துக்கான அவசியத்தையும் அதனை அமுலாக்குவதையும் இணைக்கப்படுவதற்கான ஒரு முயற்சியே ஆகும். ஜனநாயகம் சாதகமானதும் பாதகமானதுமான பண்புகளை கொண்டுள்ளது. இவற்றை இந்தக் கட்டுரை ஊடாக நோக்குவோம்.

ஜனநாயகம் ஒரு நாட்டு மக்களின் பொதுசித்தம் அதாவது பொதுவிரிப்பினை கொண்டே செயற்படுகின்றது. 2/3 பங்கினரின் பெரும்பான்மையுடன் இவ் ஆட்சி நடைபெறுகின்றது. இப் பண்பு ஜனநாயகத்துக்குரிய ஒரு சாதகமான பண்பாகும். இதன் மூலம் அரசின் அதிகாரத்தை ஆட்சியாளனிடமன்றி அதை மக்களிடம் கொண்டு செல்கிறது. இது மக்கள் இறைமை ஆகும்.

மக்களாட்சி எனக் கூறப்படும் ஜனநாயகமானது மனித உரிமைகளினைப் பாதுகாத்தல், வாக்குரிமை, தேர்தல், சகிப்புத்தன்மை, சமத்துவம், ஊடாக சுதந்திரம் இச் சட்டத் தொகுதியில் வழக்கு விசாரித்ததில் சாட்சிகள் மூலம் நிறுவித்தல், சந்தேக நபர்கள் குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்படும் வரை அவர் நிரபராதியாக கருதப்படல், சட்டத்தின் முன் அனைத்து மக்களும் சமத்துவமாக மதிக்கப்படல் போன்ற ஜனநாயக பண்புகள் இந்த அரசுக்குரிய பலமாக காணப்படுகிறது.

இங்கு தனி மனித சுதந்திரம் முதன்மை பெறுகின்றது. மட்டுமல்லாமல் அனைத்து மக்களுக்கும் சிந்திக்கும் சுதந்திரத்திற்கும் மனச்சாட்சிப்படி நடக்கும் சுதந்திரத்திற்கு உரிமையுண்டு. குடி மக்கள் அமைதியாக ஒன்று கூடலுக்கும் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரம் உண்டு. இந்தத் தனி மனித முயற்சிகள் மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல் ஆகவே நாடு அதிவேக அபிவிருத்தியடையக்கூடிய வாய்ப்பாக இந்த ஜனநாயக நாடுகளின் சாதகமான பண்பாகும்.


இருப்பினும் ஜனநாயக நாடுகளில் பலவீனமான தன்மைகளும் காணப்படுகின்றன. ஜனநாயக மயப்படுத்தப்படும்போது இனத்துவம் மற்றும் இனத்துவ வேறுபாடு ஜனநாயகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது எனக் கூறலாம். இனத்துவ அடையாளங்களும் வேறுபாடுகளும் ஜனநாயகத்தின் மாற்றத்திலும் இருப்பினும் பாரிய தாக்கம் செலுத்தி வருகின்றது. யுத்தங்கள் எல்லாமே இன முரண்பாட்டினாலே ஏற்பட்டிருக் கின்றன.

அந்த வகையில் ஆரம்பத்திலிருந்து இலங்கையில் உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கைகள் அனைத்துமே ஒரு இனத்தினை மட்டுமே திருப்திப் படுத்துவதாக அமைந்திருந்தன. தனிச்சிங்கள அமைச்சரவையின் உருவாக்கம், காணி குடியேற்றக் கொள்கை, மொழிக் கொள்கை, பல்கலைக்கழக தரப்படுத்தலின் முறைமை போன்ற பல விடயங்கள் பெருபான்மை இனத்துக்கே நன்மையை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால் சிறுபான்மை வாத ஆட்சியானது ஜனநாயகத்துக்கு முரணானது. இது ஜனநாயகத்தினை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது எனலாம்.

அரசியல் கலாசாரம் என்பதில் மதத்தின் மொழியின் தாக்கம் காணப்படுகிறது. ஆகவே ஜனநாயக அடிப்படையிலான கலாசாரம் பாதிப்படைகிறது. மேலும் வன்முறையை பயன்படுத்தல், பாகுபாடு காட்டல் போன்றன இடம்பெறுகின்றது. இது ஜனநாயகத்தின் சாதகமற்ற பண்பாக காணப்படுகின்றது.

**யோகரட்ணம் பானுஷியன்**
யாழ். மத்திய கல்லூரி
(உயர்தர வகுப்பு மாணவன்)

**புதுவிதி 100 ஆவது இதழை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை**



## காற்று எனும் நண்பன்!

மூங்கில் முளைப்பதற்கு
முன்பாகவே பிறந்திருந்து
நாம் புல்லாங்குழல் செய்வோம்
என்று அறிந்திராத காற்று.

நம் சங்கீத ஸ்வரங்களுக்கு
முன்னதாகவே அவை
பாடியிருந்தன பாட்டு.

தென்றலாய் புயலாய் பல்வேறு
வடிவங்களில் பெயர் மாறி ஓரிடத்தில்
நில்லாது அலைந்து திரியும்

ஒரு கைதியைப் போல
அடைந்து கிடக்காத காற்றை
வாடகைக்கு வாங்கிய நாம்
சொந்தமாக வைத்துக் கொள்ள
நினைக்கும் பேராசைக்கு அது
அடிபணியாமல் தன் போக்கில்
தன் சுதந்தரப் பாதையில் போய்விட முடிவில்
நாம் மரணத்தின் வண்டியில் ஏறி
வேற்றுலகு செல்கிறோம்.

மூச்சுக்காக மூச்சுவிடாமல்
சண்டையிட்டு மூச்சை விட்டுவிடும்
மூர்க்கத்தனத்திற்கு "மனிதம்" என்று
பெயர் சூடிக்கொண்டு வாழ வந்து விடும் நாம்,

காற்றும் காற்றும்
சண்டையிட்டு பூமியை விட்டு
போய்விட்டால்,
காலமானவர்கள் என்று காலத்திற்கும்
அழியா பெயர் சூடிக்கொள்வோம்
என்பதை மறந்து விடுகிறோம்!

காடுகளாய் கிடந்த பூமியில்
களங்கமற்றுத் திரிந்த காற்றை
நாம் வளர வளர, அழியவிட்ட காடுகளால்
மரணமடையச் செய்ய முயல்வதால்
தன் வெப்பத் தோழனை விட்டு
நம்மை கொல்கிறது காற்று

மனிதனின் மரணத்தை சூறாவளியின்
கைக்கொண்டு தீர்மானிக்கும் காற்று தன்
புனிதத்தை மீளும் வரை
தன் இலட்ச்சியத்தை கைவிடப்போவதில்லை
என்பதால் காற்றின் தோள்களில்
நண்பனாய் கை போட்ட வண்ணம்
சின்னச் சின்ன காடுகளைப் பரிசளிப்போம்.


காற்றையும் ஒரு குழந்தையாய் எண்ணி
அன்பு செய்வோம் - காலத்தால்
வளரும் குழந்தை நமக்குத் துணையாவது
போல
காற்றும் நமக்குத் துணையாகட்டும்...

- மாதவி உமாசுதசர்மா

**புதுவிதி 100 ஆவது இதழை முன்னிட்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சிறுகதை.**

# பாலம்

கொ. பாபு (சகாயராஜா)
வவுனியா



“புள்ளங்களா... புள்ளங்களா வாங்க. இந்தக் கடகத்த செத்த எறக்கி உடுங்க.”

“மச்சி..மச்சியே... மச்சியெங்க போனிக ஒத்தரையுங் காங்கலியே. உம்மாடி தல வெறைக்குது. என்ர அல்லாஹ்.”

“ஊட்டுல ஒத்தரும் இல்லையா?”, சவிரியாச்சியின் வீட்டு முற்றத்தில் நின்று, தலையில் கடகப் பெட்டியின் சுமையுடன், சுற்று முற்றும் பார்த்தாள், மம்மது மரியம்.

அக்கடகத்துள் பழத்தேங்காய் களும், பனை ஈர்க்கிளில் கோர்த்த முந்திரிகைப்பழங்களும், முந்திரிகைப் பருப்புகளும் இருந்தன. அவை ஓர் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்தது.

“ஆ மச்சி! கன நாளைக்குப் பிறகு வந்து இருக்கிறீங்க.”

“ஓ... மச்சி! இஞ்ச வாங்க. கொஞ்சம் எறக்கி உடுங்க. சும்மாடும் தலையில நேரா ஈக்கல்ல. கொஞ்சம் நழுவிடுச்சி.” சவிரியாச்சியும் கூடமாட ஓர் கை பிடித்து, கடகப்பெட்டியை இறக்கி விட்டாள்.

“களையா ஈக்கு” என்றவாறு, தலையில் இருந்த சும்மாட்டால், முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

முந்திரிகைத் தோட்டத்துள், வெளவால்கள் கூடியது போல், எங்கெங்கோ நின்ற சிறுவர்கள், முந்திரிகைப் பழ வாசம் மூக்கைத் துளைக்க, கடகப் பெட்டியை வட்டமிட்டார்கள்.

“இதுயாரு மச்சி, உன்ர பிள்ளைங்களா?” சவிரியாச்சி தலையை அசைக்கவும்

“மொழங்காலுக்கு கீழ இத்தினாண்டி இருந்ததுகள், இப்ப ஒசந்திண்டாங்க, உன்ர புள்ளங்களில் என்ர கண்ணே பட்டிடும் போல. அல்லாஹ் ஒரு கொறையும் வைக்க மாட்டான், ஒம் பிள்ளைகளுக்கு. நீ யாருக்கு கெடுதல் பண்ணினா?”

“ஒத்தருக்கும் இல்ல. சத்தியமா மச்சி, அந்த அண்ணன நெனச்சாக்கா, என்ர மனசு தாங்காது. புண்ணியவான் போய் சேந்திண்டாரு”,

சவிரியாச்சி மம்மது மரியத்துக் குப் பாண் துண்டும், தேநீரும் கொடுக்க, பசிக்களையுடன் வந்த மரியம்,

“ஏ மச்சி பாணையெல்லாம்...” என்ற வண்ணம் தண்ணீர்ச் செம்பை எடுத்து, வாய்க்குள் கரைஞ்ச வெற்றிலை எச்சியை, வாய் கொப்பளித்த பின், பாண் துண்டையும் சாப்பிட்டு, தேநீரையும் குடித்ததும், பசித்துக் களைத்து, தலை சுற்றிய உடல் புதுப் பலம் பெற்றது மம்மது மரியத்துக்கு மட்டும் புரியும்.

சாக்கில் இருந்த சம்பா நெல்லை, அளந்து கொடுத்து, சில பழத்தேங்காய்கள் வேண்டிக் கொண்டாள் சவரியாச்சி. புருசனையும் இழந்து, ஒரு பொளைப்பும் இல்லாம இருக்கிற, சவிரியாச்சிற்ற, பாணையும் வேண்டித்திங்கிறது. ஒரு பாவப்பட்ட காரியம் போல பட, ஒரு பழத்தேங்காயை இனாமாக கொடுக்க முனைந்தாள் மரியம்.

“சும்மா விசர் வேலை பார்க்காம, பெட்டிக்குள்ள போடுங்க தேங்காய, இவ்வளவு பாரத்தையும் சுமந்து, இந்த ஊர் மனைக்குள்ள, வளவுவளவா போய், வித்து வாறது லேசுப்பட்ட காரியமா?”

“இந்த ஒரு தேங்காய உனக்குத் தாறதில, நான் எங்க கொறஞ்சா போயுடுவன். அடம் பண்ணாம எடுங்கிறன்.” மனமில்லாமல் நின்ற சவரியாச்சியை கணக்கெடுக்காமல், திண்ணையின் ஓரமாக, தேங்காயை உருட்டி விட்டாள் மரியம். கட மட என்று அது உருண்டு சென்றது.

திண்ணையின் ஓரமாகக் குந்தி, கொட்டைப்பாக்குகளை, பாக்கு வெட்டியால் மெலிதாக சீவி, முழு வெற்றிலையின் காம்பை நுள்ளி, வீசி. அளவாக சுண்ணாம்பு தடவி, சுருட்டி வாயில் திணித்துக் கடித்தாள் மம்மது மரியம்.

நெடிய பெண்ணான அவள், தலையில் முக்காடு போட்டிருந்தாள். இரக்கம் சுரந்த விழிகள், வஞ்சனை சூது அறியா சொல்லொலிகள் தான் சுழரும் உறவுச்சுழலில் மகிழ்வைத்தெளிப்பாள்.

“ஓங்க பெரியக்கா தங்கமலர் புருசன், இப்பவும் குடிக்கிறதா சவிரி.”

“இப்ப குடிக்கிறதக் குறைச் சிற்றார். பையங்களும் தோளுக்கு மேல ஒசந்தப் பிறகு என்ன குடி?”

“தங்கம் வீட்டுப் பக்கம் போய் கன நாளாச்சு, உங்கப்பாவும், எங்க வாப்பாவும் விளாத்திக் குளத்துல கமஞ்செஞ்சாப் போல நாங்க கொமருகள். நீ நாலஞ்சு வயதுக்கு எளம ஒசக்கப் போட்டிருந்த காவல் கொட்டிலில ஏறி, விளையாடுவோம். விளாம்பழம் பொறுக்கி, அதுக்குள்ள சீனியும் போட்டுச் சாப்பிடுவோம்” இப்படி மம்மது மரியத்துக்கும், அவள் வாப்பாவுக்கும், அவள் கணவனுக்கும், இந்த ஊருக்கும் இடையே, தொன்று தொட்டு, பரம்பரை பரம்பரையாக பழகி வந்த மூத்த உறவு ஆகும்.

அதோ கட்டையாக நறுக்கப்பட்ட, நரைத்த முடிகளைத் தடவிக்கொண்டிருப்பவர், மம்மது மரியத்தின் கணவர், மீராசாகிபர். ஆடாமல் மண் வீட்டை ஒரு ஓட்டு வீடா மாத்திக்கணும். நா செத்துப்போறக்கிடையில் ஒப்பேத்திடனும். அல்லாஹ் துணை செய்வார்.

அன்று வெள்ளிக்கிழமை என்பதால், பள்ளிவாசல் செல்வதற்காய், வெள்ளைக் கொக்குப்போன்று புறப்பட்டு நின்றார், மீராசாகிப் மரைக்காயர்.

காலையில் பிடுங்கிய சோளன் பொத்திகளை, உமல் பேக்கில் போட்டு, சைக்கிள் கேன்டிலில் கொழுவிய பின்பு “புள்ள உனைசா, நான் பள்ளிக்குப் பெயித்து வாரன்” என்று, புறப்பட்டார். தொழுகையின் பின்னர், முத்துத்தம்பியர் வீட்டிற்கு நேராகச் சென்றார். ஒற்றையடி வரம்பால், சைக்கிள் ஓடி மீராசாகிப், வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். அவரைக் கண்டதும் சவிரியாச்சி மனச்சுமையின் ஒரு பகுதி, இறங்கியது போன்று, வாசலில் நின்றபடி “எங்க உங்களை, இந்தப் பக்கமே காணேல்லை என்று, முந்த நாள் கூட, நான் நினைச்சேன்.”

“எங்க மன, எனக்கும் நல்ல சுகம் இல்ல, அதனால் முன்னம் மாதிரி அடிக்கடி, வந்து போக முடியால்ல. நான் எப்பவும் நினைக்கிறது தான். உன்னையும், பிள்ளைகளையும், பாத்து விட்டுப் போகணும் எண்டு, அல்லாவும் அதுக்கு ஒத்தாசை பண்ணனுமே”, சைக்கிளில் இருந்து இறங்கி வந்தவர், கையில் இருந்த, உமல் பேக்கைக் கொடுத்தார்.

“என்ன காக்கா இது?

அஞ்சாறு சோளன் பொத்தி கள் கிடந்துச்சு. அதுதான் புள்ளை களுக்கு எண்டு கொண்டு வந்தன்.”

“அவர் செத்த பிறகு, என்னையும் பிள்ளைகளையும் நினைச்சு, எங்களைப் பாக்க வாறீங்களே, அதுவே போதும். இதுகளெல்லாம் என்னத்துக்கு வீணாக்காவிக் கொண்டு.”

“நீ என்ன? என்னோட கூடப்பிறந்தது என்ன? எனக்கு எல்லாமே ஒண்ணுதான். உன்னையும், பிள்ளைகளையும் காங்கிற நேரமெல்லாம், எனக்கு பெரிய வவுத்தெரிச்சலா இருக்கும்.”

சோளன் பொத்திகளுடன் குசினியுனுள் நுழைந்தவள், பெரிய கிளாஸ் ஒன்றில் தேசிக்காய் கரைத்து வந்து, கொடுத்தாள். சென்ற தடவை அவர் இங்கு வந்திருந்த போது, கதைத்து விட்டுச் சென்ற கதையை தொடங்கினார்.

“அநியாயமா முத்துத்தம்பிட மூன்று ஏக்கர் காணியை, வித்துப்போட்டாய், தலைகீழா தண்ணி பாயிற, சோக்கான கழித் தறை. மழை இல்லாத, பஞ்சமான பஞ்சம் எல்லாம், வித்துச்சுடாம, அவன் காவாந்து பண்ணின காணி.”

“நீங்க சொல்கிறது உண்மை தான் காக்கா. நான் என்ன செய்கிறது? அவருடைய வருத்தத்துக்ச்கு செலவழிச்ச கடன், செத்த வீட்டுச் செலவு, இனிப் பழைய கடன்கள்”

“அதெண்டா உண்மைதான், ஊதாரித்தனம் இல்லத்தான். இப்ப கையில காசு எவ்வளவு மிச்சம் இருக்கு.”

“பத்தாயிரம் ரூபா காக்கா”

“என்ர மவன் சுலைமான். ஒரு ஏக்கர் காணி குடுக்கப்போறான். அதை விலையாய் வேண்டிப் போட்டியெண்டா, நாளைக்கு புள்ளைகளுக்கு உதவும், மற்றப்படி காசா வைச்சிருந்தா, கண், மண் தெரியாம கரைஞ்சு போய்விடும்”

மீரான் காக்காவின் ஆலோசனையும், பரிவும், ஒரு உடன்பிறப்பின் உதிரத்துடிப்பை சவரியாச்சியின், உள்ளக் கிடக்கையினுள் உண்டு பண்ணியது. அவரைச் சூழ மிதந்து கொண்டிருக்கும், மனிதத் தன்மையை ருசி பார்த்தபடி,

கொஞ்சநேரம் இருங்க, சோறு சமைச்சிற்றன். டக்கென்று பருப்பு வச்சு, முட்டை அவிக்கிறன் சாப்பிட்டு போங்க.”

“தேசிக்காய்த் தண்ணி

(மறுபக்கம் பார்க்க)

குடிச்சதே, வயிறு கூலா, முசு முசுண்டு இருக்கு. அதெல்லாம் ஒண்ணும் வேணாம். புள்ளைகள் பள்ளிக்கூடத்தால வரப்போகுதுகள், ஆக்கி மூட்டிக் குடு. நான் வாறன் மன பெயித்து."

சூட்டோடு சூடாக, காணி விடயத்தைக் கதைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், அன்று மாலை ஈச்சாரில் கிடந்து, எழுந்து, இரண்டு கைகளின் கரங்களையும், பிடரித்தலையில் வைத்துக் கோர்த்தபடி, கண்களை அங்கும் இங்கும் அசைத்தார் மீராசாகிபர்.

"காக்கா ஒங்கள வாப்பா வந்திட்டுப் போவட்டாம்."

"ஏனாம் புள்ள உனைசா, வாப்பா வரச்சொன்னாரு?"

"ஏனிண்ணு தெரியாது காக்கா"

"ஈச்சாரில் நெத்தரையால இப்பதான் ஒழும்பி ஈக்கார்."

வாப்பாவின் முன் ஒரு, குழந்தை போல் போய் நின்றான். இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான சுலைமான். தனது வாப்பாவின் முன் நிற்கும்போது, ஒரு மட்டு, மரியாதையுடன் அடக்கமாகவே நின்றான். சிறு வயதுப் பழக்கம். இன்றும் அதேபோன்று தொடர்ந்து வழிவருகின்றது. எதிரில் நிற்கும் சுலைமானை நிமிர்ந்து பார்த்தார் சாகிபர். பேசாமல் கவுண்ட தலையாக நின்றான்.

"டேய் உன்ர காணித்துண்ட விக்கிறதுக்கெண்டு அங்க, இங்க ஒண்டும் போக வேணாம். அந்தப் புள்ள சவிரியாச்சிற்ற குடுத்திடு. அஞ்சப் பத்த அதுகளிட்டப் பாக்காம குடு."

எதுவுமே சிறிது நேரம் கதைக்காமல் நின்று, பின்னர் சென்றான் சுலைமான். தன் மகன், தனது சொல்லை தட்டமாட்டான் என்ற, நம்பிக்கையில், பிடரித் தலையில் கோர்த்திருந்த, கரங்களை உருவினார். அஞ்சப் பத்த பாக்காமல், அதுகளிட்ட காணியைக் குடுத்திடு என்று, வாப்பா சொன்னத நெனைக்க, நெனைக்க எரிச்சலாக இருந்தது.

ஒரு சில நாட்களின் பின் வாப்பாவிடம் தனது விருப்பத்தை கூறினான். "நான் காணியை நல்ல விலைக்கு, குடுத்துட இருக்கிறன். நல்ல மனுசங்கட்ட நாம, அறா விலையும் சொல்லிக்கவும் ஏலாது. அதிக விலையும் சொல்லிக்கவும் ஏலாது தானே. ஏதோ ஒரு வழியில உதவத்தான் பாக்கணும்."

வாப்பா ஒரு பழங்காலத்து மனுசராத்தான், இன்னும் இருக்கிறார். மனதுக்குள் எண்ணிக் கொண்டான். சுலைமான் தனது வெறுப்பையும், எரிச்சலையும், மெல்ல மெல்ல வெளிப்படுத்த, சாகிபருக்கு சுள், சுள்வொன்று கோபம் வந்து விடும். "வாப்பா ஒரு முசுறு. ஒனக்குத் தெரியாதா? கொஞ்சம் அடங்கிப்போடா" சுலைமான், உம்மா குறுக்காகக் கும்பிட்டுப் பார்த்தாள்.

"யே ஏன் சத்தம் வெய்க்கிறீங்க, சண்டை பிடிக்கிறீங்க? சத்த மெதுவாத்தான் பேச மாட்டீங்களா?" கணவனை நோக்கி உம்மா **திரும்பினாள்.**

சாகிபர் மீண்டும் தொடர்ந்தார், "அது ஒண்டுமில்லடி, காலங்கெட்டுப் போச்சு. மனுச நீதி செத்துக் கொண்டிருக்கு, நீங்க அந்தப்படி அள்ளுண்டு போறீங்க", வெடுக்கென்று திரும்பிச் சென்று, ஈச்சேரில் அமர்ந்தார்.

மீண்டும் ஒரு வார காலமாக மீராசாகிபருக்கும், மகன் சுலைமானுக்கும், காணி விவகாரம் தொடர்பாக, காரணகாரியங்களோடு கூடிய தர்க்கமும், வெட்டிப் பிளந்த நியாயங்களும் பேசப்பட்டு, விவாதிக்கப்பட்டு இறுதியில், ஆளையாள் முகம் பார்த்து பேசாத அளவிற்கு, முறுகல் நிலையை உண்டு பண்ணிவிட்டது அச்சமாச்சாரம்.

மகன் சுலைமான் தனது தரப்புக் கருத்தை முன்வைத்தான். "வாப்பாவுக்கு என்ன விசரா? சாகுல் கமீது என்ர காணிக்கு, சுளையா பதினையாயிரம் ரூபாய், தாரன் எனறு சொல்லுறான். அத உட்டுப்பிட்டு சவிரியாச்சி அக்காவுக்குப் பத்தாயிரத்துக்கு கொடுக்கட்டாமாம். என்னண்டாலும் சாகுல்கமீது நம்ம இன, சாதி இல்லையா?"

"டேய் என்னங்கடா இனமும், சாதியும், மதமும், நாளைக்கு செத்துப்போனா, நாலு நாளால நாறிப்போற, உடம்ப வைச்சுக் கொண்டு. இலங்க வங்கியில் வெள்ளாமக் கடன் எடுக்க, ஒரு பொணப் போட நம்மடயாண்ட ஊடு, ஊடாய் தூங்கித்தானே பாத்தன். கடைசியா முத்துத்தம்பிதான் பொணை போட்டு கடன் எடுத்தது. அந்த விதவைக்கும் , அவ பிள்ளைகளுக்கும் நாம செய்கிற, புண்ணியமாய் இருக்கும்"

"இப்ப என்ன எழுதியா குடுத்திங்க? வாயால கதைச்சதுதானே, அதுக்கு ஏன் மாரடிக்கிறங்க?

"நான் சோறு திங்கிற வாயால, மலத்தச் சாப்பிடுகிற மனுசன் இல்லடா, நாம வாயால சொல்லுற வாக்கு இருக்கில்லையா? வாக்கு. அது நம்ம உசிருக்கும் மேலானது. நாணயமா அத காக்கிறவன், காப்பாத்திறவன்தான் மனுசன். நீ உன்ர காணியை, எவனுக்கும் குடுத்துட்டுப் போ."

மகள் உனைசாவும், மரியமும், மௌனப் புயலோடு போர் தொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் வயற் காணிக்கும், அயலுக்கு, தந்தை மகன் உறவுக்கும் இடையே நடக்கும், மோதுகைக்குள் புதையுண்டு, இறுதியில் திரிசங்கு நிலைக்குள்ளானார்கள்.

"வாப்பா கீறின கோட்டைத், தாண்டித்தான் ஆகவேண்டும். நான் என்ன? அவருக்கு இன்னும் மூண்டு வயசுக் கொழந்தண்ட, நெனப்பா? காசப் பாக்காத, அஞ்சப் பத்தப் பாக்காத என்றால், அதுக்கு என்ன அரத்தம்? முடியாது, முடியவே முடியாது. அவரு, அவரிட வேலைய பாத்துக்கிட்டு ஈக்கட்டும். இனிமே நான், எண்ட வேலையப் பாக்கிறன். முடிவு கட்டிறன் இதற்கெல்லாம், நல்லதொரு **முடிவு கட்டிக் காண்பிப்பேன்."**

இன்னும் மீராசாகிபரின் அழுங்குப் பிடி தளரவே இல்லை.

சுலைமானின்அஞ்சா நெஞ்சுக்குள், அலை நதி மெதுவாய் ஊர்ந்தது. சிறுபராய மனக்கிடங்குள் விழுந்தான். கிடுகு வியாபரம் செய்த, வாப்பாவின் ஒத்தக்கரத்தை வண்டியில் முன்னே கலைத்ததில், ஆறு மரக்கால் நெல்லைச் சுமந்து, முத்துத்தம்பியர் வீட்டிற்கு வாப்பாவும், மகனும் சென்றார்கள்.

"சாகிபு நான் உனக்கு, சாப்பாட்டுக்கு முந்தித் தந்த நெல்ல, இப்ப நீ திருப்பித் தர வேண்டும் என்று இல்லை. நான் எப்பவாவது கேட்டேனா? தண்ணித் தட்டுப் பாட்டில உன்ர கட்டத் தறை போன வருசம், கதிரும், குடலையுமா பட்டுப் போனது எனக்குத் தெரியாதா... என்ன?"

"இல்ல... இருந்தாலும்..." என்று தயக்கமாய் இழுத்தார் சாகிபர்.

"நீ புள்ள குட்டிக்காரன், அதுகள் பசி பட்டினி இல்லாம இருக்கோணும் எண்டதுக்காக தந்தது. ஆனா இது சாப்பாட்டுக்கு தந்த நெல்லுடா..." என வேண்ட மறுத்தார்.

போன வண்டில் நெல்லு மூட்டையுடன், தன் வீடு வந்ததும். பின் ஆசனத்தில் இருந்து தான் குதித்ததும், சுலைமானின் ஞபாகக்கிடங்கிலிருந்து உற்பத்தியாகியது.

அன்று குசியாக இருந்த வாழ்வெல்லாம், இன்று வருத்தம் தருவதாக சிதறிக்கிடக்கின்றன.

உறவும் பொருளும் உரசிக் கொண்டன உம்மா மம்மது மரியத்தின் இரக்கமுள்ள வார்த்தைகள். புருசனை இழந்து, பிள்ளை குட்டிகளுடன் பஞ்சப்பட்டு, இடறும் சவிரியாச்சியின் பரிதாப நிலை, மீராசாகிபரது வெட்டொன்று, துண்டு ரெண்டு என்றவாறான நறுவிசான முடிவு. இவை யாவும் ஒன்று கூடி நின்று, சுலைமானின் இதயத்துள் இரக்க சிந்தையை வருடிவிட்டது.

அவன் தன் தலையில் உள்ள பாரத்தை, இறக்கி வைக்குமாற் போல, இறுதி முடிவெடுத்து, சவிரியாச்சிக்கே தனது காணி ஒரு ஏக்கரை, எழுதிக் கொடுத்து, பணம் பத்தாயிரம் பெற்றுக் கொண்டான்.

வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய, முஸ்லிம் மக்களின் வெளியேற்றுத்தின் போது,

மீராசாகிபர் சவிரியாச்சி வீட்டிற்கு வழிப்பயணம் சொல்லப் போனார்.

"அம்மா நிண்டு பறைய நேரமில்லை. நான் போறன் தாயே...! இனி நாங்க எங்க போய், எந்தத் தெருத்தெருவாய், நாய் மாதரி அலையப் போகிறோமோ? அந்த அல்லாஹ் ஒருவனுக்குத்தான் தெரியும்." ஒரு உடன் பிறப்பின் பிரிவுபோல, அவருடைய விலகல் இருந்தது.

சவிரியாச்சியின் மௌனித்து சிலையாகிய உடலுக்குள், குருதியாறு கொதித்து, அறம்புறமாய் அங்கும், இங்கும் ஓடிக்கொண்டு இருந்தது. பல மாதங்கள் கடந்ததும், அநுராதபுரம் **நெல்லியாகமை என்ற, சிங்கள** கிரமத்தில் இருந்த, அகதி முகாமில் மீராசாகிபர் குடும்பத்தைப் பார்ப்பதற்கு

சவிரியாச்சியின் மூத்த மகன், யோகன் செல்கிறான். மம்மது மரியம் இறந்து போனதை அங்கு போய் அறிந்து கொண்டான். பாரிசவாதத்தில், படுத்த படுக்கையாக கிடந்தார், மீராசாகீபர். காது சரியாக கேட்பதில்லை, வாய் சாதுவாக ஒரு புறம் கோணி, கொத கொதவென்று கதைப்பார்.

மடு முகாமில் சுகயீனம் காரணமாக, சவிரியாச்சி இறந்த செய்தி, யோகன் அங்கு சென்ற பின்புதான், அவர்களுக்குத் தெரியும். அசந்துபோன மீராசாகிபரது ஒட்டிய உடலை, முகாம் கப்புடன் சாத்தி, முதுகிற்கு தலையணை வைத்து விட்டிருந்தனர்.

யோகனின் கரத்தைப் பிடித்து, அவர் கண்ணில் ஒத்தி, மெதுவாய் விட்டார். மெலிந்து ஒடுங்கிய அவரது உடலை, ஒரு வெள்ளைச் சறம் சுற்றிக்கொண்டிருந்தது. முகாமுக்குள் முடங்கி, முடங்கி கிடந்ததில், முதுகில் சிறு, சிறு காயங்கள் ஏற்பட்டிருந்தன. பிணத்தைச் சுற்றுமாற்போல் ஈக்கள், அவரைச் சுற்றி இரைந்து பறந்தன மரணவாயினுள் நுழைபவர்போல, நடுக்கப்பில் சாய்ந்திருந்தார்.

திடகாத்திரமான சரீரத்துடன், கம்பீரமாக ஒற்றை வரம்பில், நேராக சைக்கிள் ஓடி வரும், மீராசாகிபரின் உடலை பயபீதிகளும், இடம்பெயர்வும், வீணான கவலைகளும், நிம்மதி இழந்த பொழுதுகளும், ஒன்று கூடி, சப்பித் துப்பிவிட்டிருந்தன. நெற்றிச் சுருக்கத்துடன், அரைக்கண் திறந்து, மூச்சு வாங்க, இளைத்து, களைத்து, அவதியுற்றபடி அவர் கதைத்தார். பாதி முகத்தை மூடிய, நரைத்த தாடி வளைந்து கிடந்தது.

"திரும்பவும் என்ர புள்ளங்க, அங்க நம்மட ஊரோடு வாறதுக்குத்தான், பதிஞ்சிருக்கிறாங்கள். ஒத்தருக்கு ஒத்தர் ஒத்தசையாக இருங்க. ஆளையாள் மல்லுக்கட்டி, சண்டை சச்சரவு பிடிக்காம ஒற்றுமையாக வாழுங்க, ஏனாக்கா நாம மனுச சாதியில்லையா?

ஒண்டடி, மண்டடியா இருந்த நாம, இண்டைக்கு எப்படிப் பிரிஞ்சு போனோம்.

ஆட்சியும், அரசாங்கமும், அதிகாரமும், மாறி, மாறி வந்து போகும். எல்லாரும் நம்மள ஏமாத்தி, தெத்திப் பிழைக்கிறாங்க. ஏகப்பட்ட, சப்புச் சவறுகள எல்லாம், நம்ம தலைகளுக்குள்ள புகுத்தி வச்சிருக்காணுகள். நாம, நம்மள அறியாம இருக்கிறதே ரொம்ப மடமத்தனம்.

மின்னி மறைஞ்சாப் போல, நாங்க மௌத்தாப் போயிடுவோம். இனி வருங்காலம் இளம் பிள்ளைகள், உங்கட, கைகளிலதான் இருக்கு." கடைசி இராப்போசன விருந்துண்ணும், மனோ நிலையில் இருந்தான் **யோகன்.**

●

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 72

நன்றி,தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா



சிவம் ஒருவாறு உருண்டுபுரண்டு இருளுக்குள் வந்துவிட்டான். அவன் அணியில் சிலர் வீரச்சாவடைந்த போதும் பலர் காயங்களுடன் தப்பிவிட்டனர். எல்லோரையும் பின்நோக்கிப் பாலைப் பாணிக்கு நகரும்படி கட்டளையிட்டான்.

சிவம் ஒரு பெரியபாலை மரத்தின் பின் பதுங்கிக் கொண்டு இருளிலிருந்து படையினரின் வேட்டுக்கள் ஒலியைக் கவனமாகக் கேட்டு அவை புறப்படும் இடத்தை ஊகித்து ஒவ்வொரு வெடியாகப் போட்டான். ஒவ்வொரு ரவைக்கும் 'மகே அம்மே'க்களே கேட்டன. ஆனால் இன்னொரு பலன் கிட்டியது. இருளில் தங்கள் சகாக்களின் அவல ஒலியைக் கேட்ட பதுங்கியிருந்த படையினர் பலர் எழுந்து முகாமை நோக்கி ஓட ஆரம்பித்தனர்.

அவர்கள் வெளிச்சமான இடத்தைக் கடந்தே முகாமுக்குள் ஓடவேண்டியிருந்தது. அவர்கள் வெளிச்சத்தில் ஓடும்போதே ஒருவர் விடாமல் சுட்டுத்தள்ளினான் சிவம்.

அதன் பிறகே படையினர் அங்கு போராளி ஒருவன் பதுங்கியிருந்து சுடுகிறான் என்பதைப் புரிந்துகொண்டனர். துப்பாக்கி வேட்டுகள் சிவம் இருந்த திசை நோக்கிப் பாயத் தொடங்கின. வரும் ஆபத்தைப் புரிந்துகொண்ட சிவம் ஒரு மரத்தின் பின் நின்று சுட்டுவிட்டு அடுத்த மரத்தின் பின்னால் நின்று சுடுவது, பின்பு அடுத்த மரத்துக்கு தாவுவது என்ற வகையில் பின்வாங்கினான். பலபோராளிகள் நிற்பதாகக் கருதிய அவர்கள் அவனைப் பின்தொடரவில்லை.

சிவம் பாலைப்பாணியை அடைந்தபோது நேரம் இரண்டு மணியைத் தாண்டிவிட்டது. ஏறக்குறைய முப்பது வித்துடல்கள் அங்கு அடுக்கப்பட்டிருந்தன. அங்கு நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. பல போராளிகளின் வித்துடல்கள் மீட்கப்படாமலும் போயிருக்கலாம் என சிவம் கருதினான்.

சுகுணன், ரூபா, மங்களா ஆகியோருக்கு என்ன நடந்தது என்பதை அவனால் தெரிந்து கொள்ளமுடியவில்லை. தங்களைப் போன்ற அனுபவசாலிகளையே தடுமாற வைத்த அந்தச் சண்டையில் புதிய போராளிகள் என்ன பாடுபட்டிருப்பர் என்பதை நினைத்தபோது அவர்கள் மேல் பெரும் பரிதாபமே அவனுக்கு ஏற்பட்டது.

மாபெரும் தரையிறக்கம், தீச்சுவாலை, முல்லைமுகாம் தகர்ப்பு, ஜெயசிக்குறு, ஓயாத அலைகள் மூன்று எனப் பெரும் சமர்களிலெல்லாம் சாதனைகளை ஈட்டிய அவன் இந்த சின்ன முகாம் தகர்ப்பில் பெரும் தோல்வியடைந்தமை அவனுக்கு பெரிய அவமானமாகவே தோன்றியது. சிவம் எவருடனும் எதுவுமே பேசாது கண்களை மூடியவாறு ஒரு மரத்தில் சாய்ந்தவாறே அமர்ந்துகொண்டான்.

பொழுது விடிவதற்கு முன்பாகவே சகல அணிகளும் வாகனங்களில் ஏற்றப்பட்டு பல்லவராயன்கட்டிலுள்ள ஒரு முகாமுக்கு கொண்டு வரப்பட்டுவிட்டனர். ஏற்கனவே காயமடைந்த போராளிகள் முதலுதவியின் பின்பு நேரடியாகவே கிளிநொச்சி மருத்துவப்பிரிவு முகாமுக்கு ஏற்றப்பட்டுவிட்டனர். வித்துடல்களும் கிளிநொச்சிக்குக் கொண்டுசெல்லப்பட்டு பின் அஞ்சலிகளுக்காக அவரவர் வீடுகளுக்கு அனுப்பப்பட்டன.

அன்று முகாம் பெரும் சோகமயமாகவே காணப்பட்டது. போராளிகள் ஒருவருடன் ஒருவர் கதைப்பதே அரிதாக இருந்தது. ஒவ்வொருவரும் ஏதோ தாங்கள் பெரும் குற்றத்தை இழைத்து விட்டது போன்று மனம் வாடிப்போயிருந்தனர். ஏராளமான தோழர்கள், தோழியரை இழந்தும் கூட முகாம் தாக்குதல் பெரும் தோல்வியில் முடிந்ததை அவர்களால் சகிக்கமுடியவில்லை. சிவம் ஒரு மரத்தின் கீழ் படுத்திருந்தான்.

இலைகளின் இடைவெளிகளால் அரிவெயில் பொட்டு பொட்டாக அவன் மேனியில் விழுந்ததைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை. அவன் அந்த முகாம் தாக்குதல தொடர்பாக ஏதோ ஒரு பெரிய தவறு அல்லது சதி நடந்துவிட்டதாகவே கருதினான். முகாம் தாக்குதல் மேற்கொள்ளப்படப்போகும் செய்தியை ஏற்கனவே இராணுவத்தினர் அறியாவிட்டால் இப்படியான தயாரிப்புக்களுடன் அவர்கள் காத்திருக்க முடியாதெனவே அவன் திடமாக நம்பினான்.

முகாம் தாக்கப்படுவதற்குச் சிறிது நேரம் முன்பு தான் அணிகளின் பொறுப்பாளர்களுக்கென ஒருங்கிணைப்புத் தளபதியால் தாக்குதல் திட்ட வரைபடம் மூலம் விளங்கப்படுத்தப்பட்டது. அதுவரை எவருக்குமே தாங்கள் ஏன் மல்லாவிக்கு கொண்டுவரப்பட்டோம் என்ற விஷயம் கூட தெரிந்திருக்கவில்லை. அப்படியான நிலையில் எதிரிகளுக்கு எப்படித் தகவல் போயிருக்க முடியும் என அவனால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

பல இடங்களிலும் தேடிக் கடைசியாக ரூபா ஒரு மாதிரி சிவத்தைக் கண்டுபிடித்தாள். அவளுக்கும் அவனிடம் எதைப் பேசுவது எனத் தெரியவில்லை. அவள் அவனருகில் அமர்ந்து கொண்டாள். சிவம் அவள் பக்கமாகப் புரண்டு கையை தலையில் கொடுத்தவாறே,

"என்ன ரூபா?" எனக் கேட்டான்.

"ஒண்டுமில்லை... சாப்பிட்டீங்களே?"

"ம்... இல்லை. பசியில்லை... இன்னும் பல்லுக்கூடத் தீட்டேல்லை", என்றான் சிவம் சோர்வுடன்.

"நான் போய் சாப்பாடு எடுத்து வரட்டே?"

"வேண்டாம்... பிறகு பாப்பம்..."

"ம் சாப்பிடாமல் விட்டால் பட்ட தோல்வி வெற்றியாய் போமே?" எனக் கேட்டுவிட்டு பதிலை எதிர்பாராமல எழுந்து சென்றாள் ரூபா. சிறிது நேரத்தில் ரூபா இரண்டு சொப்பிங் பைகளில் இரு சாப்பாடுகளைக் கொண்டு வந்து, ஒன்றைச் சிவத்திடம் நீட்டினாள்.

"இனித்தானே நீங்களும் சாப்பிடப்போறியள்?"

"ஓ... இவ்வளவு நேரமும் திறமான சாப்பாடு வருமெண்டு பாத்தன்... இன்னும் வந்து சேரேல்லை... இனி என்ன செய்ய? இதைச் சாப்பிடுவம்"

"என்ன திறம் சாப்பாடோ...?"


"ஓ... இரவு தோல்விக்காக கணேஸ் எடுத்துத் திட்டுவார் எண்டு எதிர்பாத்தன். "ஏன் சாகாமல் ஓடி வந்தனீ" எண்டு நடக்கும் எண்டு நினைச்சன். இன்னும் காணேல்லை", என்றாள் ரூபா ஒரு விரக்தி கலந்த புன்னகையுடன்.

"உங்களுக்கு அவனிட்டை திட்டு வாங்கிறது சந்தோசமே?"

"அவர் உரிமையோட தானே திட்டுறார்?", என்றுவிட்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்



## கொலையுதிர் காலம்

சவுதி அரேபியாவில் இந்த ஆண்டை கொலையுதிர் ஆண்டாக பிரகடனப்படுத்தலாம் போலிருக்கின்றது. இந்த வளைகுடா நாட்டில், 2019 இன் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம் 43 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ரீதியில் தொடர்ந்தால் ஆண்டு முடிவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் தொகை 172 ஐ எட்டிப் பிடிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. இதுவரையில் இந்த நாட்டின் ஓர் ஆண்டுக்குரிய அதிஉச்ச தொகையாக 158 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இம்முறை தண்டனை பெற்றவர்களில் 21 பேர் போதைவஸ்துக்களுடன் சம்பந்தப்பட்டவர்கள். இந்தக் குற்றத்தைவிட இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தல், நாட்டுக்கு எதிரான சதி, கொலை, பாலியல் வன்புணர்வு, வீடுடைத்து கொள்ளை போன்ற குற்றங்களைப் புரிந்தவர்களுக்கும் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மரண தண்டனைகளை நிறைவேற்றுவதில் உலகின் சம்பியனாக சீனாவும், இரண்டாவது இடத்தில் ஈரானும் உள்ளன.

## ஓங்கி ஓர் அறை...



கன்னத்தில் ஓங்கி ஓர் அறை... கோபத்தில் அல்ல! போட்டியில் வெல்வதற்காக! "சைபீரியன் பவர் ஷோ" என்ற பெயரில் இங்குள்ள கர்ஸ்நோயார்ஸ்க் என்னும் இடத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், ஆணுக்கு ஆண் கன்னத்தில் ஓங்கி அறையும் நிகழ்வும் இடம்பெற்றுள்ளது. போட்டி ஆரம்பிக்கும்போது, பங்குபற்றும் போட்டியாளர்கள் இருவரும், ஒருவர் கணணை மற்றவர் பார்த்தபடி இருக்க வேண்டும். பின்பு மாறி மாறி இருவரும் ஆளுக்கு ஆள் கன்னத்தில் அறைவார்கள். எவர் இனி என்னால் தாக்குப் பிடிக்க முடியாது என்று ஒதுங்குகிறாரோ, அவர் தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

அடியின் உக்கிரத்தில் ஒரே தடவையில் சுருள்பவர்களும் இருக்கிறார்கள். இந்தத் தடவை வென்றவர் வஸிலி கமோட்ஸ்கி. தாடி வளர்த்த ஆஜானுபாகுவான தோற்றமுடைய இந்த மனிதருக்கு கிடைத்த பரிசு 30,000 ரூபிள்ஸ். (சுமாராக 81,000 இலங்கை ரூபா). இவரிடம் ஓர் அறை வாங்கினால், கன்னத்தைப் பொத்திக் கொண்டு தொப்பென்று தரையில் விழவேண்டியதுதான் என்கிறார் நேரில் அறைந்ததைப் பார்த்து ரசித்த ஒருவர்.

## அழகின் ஆபத்து

மலையை மூடியிருக்கும் பனிப்பாளங்கள் உருக உருக , மெல்ல மெல்லத் தலைகாட்டுகின்றன மனித உடல்கள். அழகிய ஆபத்தான எவரெஸ்டின் உச்சிக்குப் போய்விட வேண்டும் என்று மலையேறுபவர்கள் எல்லோருமே உச்சியை சென்றடைவதில்லை. வழியில் பலர் உயிரிழக்கிறார்கள். எவரெஸ்டில் ஏறப் போய்க் காணாமல் போன 300 பேரில், மூன்றில் இரண்டு பகுதியினரின் உடல்கள் இன்னமும் எங்கோ பனியில் புதைந்து கிடக்கின்றன என்று நேபாள மலையேறுவோர் அமைப்பு கூறுகின்றது.

8,848மீற்றர் உச்சியை எட்டப் போய் தவறிய உடல்கள் பல தசாப்தங்கள் கழிந்தும், கெட்டுப்போகாத நிலையில் இங்கு தேடுதல் குழுவினரால் காலத்திற்குக் காலம் கண்டெடுக்கப்படுகின்றன. மார்ச் மாதம் ஆரம்பித்து மே 31 வரையான பருவகாலத்தில் மாத்திரமே மலையேற அனுமதி வழங்கப்படுகின்றது. ஒரு உடலை மேலிருந்து கீழே கொண்டுவர 30,000 தொடக்கம் 60,000 பவுண்ஸ் தேவைப்படுகிறதாம். (சுமாராக 7 இலட்சம் தொடக்கம் 14 இலட்சம் இலங்கை ரூபா) 5000க்கு மேற்பட்டவர்கள் இதுவரையில் உச்சியை அடைந்துள்ளார்கள்.



## ஆனந்தம் பொங்கும் தேசம்

ஐக்கிய நாடுகள் சபையின் உலக மகிழ்ச்சித் தரநிலை தொடர்பான அறிக்கையை வெளியிட்டது. 156 நாடுகள் இதில் பட்டியலிடப்பட்டன. நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, கனடா, நியூசிலாந்து, ஆஸ்திரியா ஆகியவை பட்டியலின் முதல் 10 இடங்களில் உள்ளன. இருப்பினும், அண்மைய ஆண்டுகளில் உலகின் மகிழ்ச்சிக் குறியீடு குறைந்துவருவதாக அறிக்கை குறிப்பிட்டது.

மக்களிடையே எதிர்மறையான உணர்வுகள், கவலை, கோபம் போன்றவை அதிகரித்து வருவதாக அறிக்கை தெரிவித்தது. குறிப்பாக ஆசியர்கள், ஆபிரிக்கர்களிடையே அண்மைக்காலமாக் இது அதிகம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.



## ரூ. 57 கோடி காருடன் பொண்ட்

அடுத்த வருடம் ஜேம்ஸ் பொண்டின் 25வது திரைப்படம் வெளிவரப்போகின்றது. சூழலை மாசுபடுத்தாத, மின்சாரத்தில் இயங்கும் ஆடம்பரக் காரான "அஸ்டன் மர்ட்டின் " காருடன் வலம்வரப் போகிறார் கதாநாயகன்!

155 கார்கள் மட்டுமே நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், ஒன்றின் பெறுமதி இலங்கை ரூபாயில் 57 கோடிக்கும் அதிகம் என்கிறார்கள். இந்தப் புகழ்பெற்ற பிரிட்டனின் கார் உற்பத்தி நிறுவனத்துக்கும் பொண்ட் திரைப்படங்களுக்கும் இடையிலான உறவு, 1964இல் ஆரம்பித்து விட்டது.

இந்த வருடத்தில் வெளியிடப்பட்ட Gold Finger என்ற திரைப்படத்தில் அஸ்டன் மார்ட்டின் ஸ்போட்ஸ் காரொன்று உபயோகிக்கப்பட்டுள்ளது. புதிய திரைப்படம், புதிய காருடன் 2020 ஏப்ரல் மாதத்தில் திரையிடப்படலாம் என்று சொல்லப்படுகின்றது. கடந்த மாதம் ஒஸ்கார் விருது பெற்ற ரமி மலெக் என்பவர்தான் இதில் வில்லனாக நடிக்கிறார்.



# ஆரிட்டை சொல்லி அழ?

## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

### வழி நடத்திறவை சரியில்லை? செக்கு மாடுகள் மாதிரி சுத்தி......சுத்தி..!



யாழ்ப்பாணம் திருநெல்வேலி கம்பஸிலை கிடக்கிற கைரேகை வைக்கிற மிஷினை ஆரோ உடைச்சுப் போட்டினம் எண்டு கோப்பாய் பொலிஸிலை முறைப்பாடு செய்திருக்கினம். நல்ல விசியம் தான். எது நல்ல விசியம் எண்டு கேக்கேல்லை? முறைப்பாடு செய்தது தான்.

பல்கலைக் கழக நிர்வாக மண்டபத்திலை கிடந்த மிஷினை அடையாளந்தெரியாத ஆக்கள் உடைச்சதெண்டுதான் பதிவாளர் பொலிஸிலை முறைப்பட்டிருக்கிறார்.

இப்ப கிட்டடியிலையும் உந்தக் கையெழுத்துப் போடுற பிரச்சினை ஒண்டு கம்பஸிலை வந்து அதுக்கு எதிரா அங்கை வேலை செய்யிற கல்விசாராத ஊழியர்கள் ஒரு கவனயீர்ப்புப் போராட்டம் ஒண்டைச் செய்தவை எண்ட செய்தியைப் பாத்த ஞாபகம் இருக்கு. அதிலை அவை சொல்லினம் என்னெண்டால் அங்கை படிப்பிக்க வாறவையும், வேறை வேலை செய்ய வாற தாங்களும் எல்லாரும் கம்பஸிலை வேலைபாக்கிற ஆக்கள் எண்டுதானே சுற்று நிருபம் சொல்லுது. அப்ப அவைக்கு அந்தச் சட்ட திட்டம் இல்லை. கல்விசாராத தாங்கள் மட்டும் மிஷினிலை கையெழுத்துப்போட வேணும் எண்ட புதுச் சட்டம் ஒண்டை ஏன் திடீரெண்டு கொண்டு வந்திருக்கினம்?

உதுன்ரை சூட்சியா நாங்கள் நினைக்கிறது என்னெண்டு தெரியுமே? படிப்பிக்கிற ஆக்கள் கண்ட படி வந்து கண்டபடி போறவை. அவையளை கையடையாளம் போடச் சொன்னால் மாட்டுவினம். அதாலைதான் அவையளைப் போடச் சொல்லேல்லை. சாட்டுக்குத் தங்களைப் போடச் சொல்லி கம்பஸ் நிர்வாகத்திலையும் கைவிரல் மிஷின் இருக்கெண்டு சொல்லுறதுக்கு வேண்டித்தான் இதைச் செய்திருக்கினமாம் எண்டு ஒராள் சொல்லி அன்னம்பாறினவர். அப்ப கம்பஸுக்குள்ளையே ஒரு மாதிரியான நிர்வாகத்தைச் செய்ய அவையளுக்கு விருப்பமில்லை. இல்லாட்டித் தெரியாதோ?

கம்பஸிலை மட்டுமில்லை, எல்லா நிர்வாகங்களிலையும் உது மாதிரிக் கனக்க இழுபறியள். போய் திணைக்களங்களைப் பாத்தால்தான் தெரியும் என்ன நடக்குதெண்டு. எல்லா இடங்களிலையும் அந்தந்த நிர்வாகத்துக்குப் பொறுப்பா இருக்கிற ஆளின்ரை தனிப்பட்ட நிர்வாகம் செய்யத் தெரியாத குறையை அங்கை பாக்கலாம்.

முதலாவது உது மாதிரிக் குறையள் ஏன் வருகுது தெரியுமே? பொதுவா எங்களுக்கு சமூகப் பொறுப்பு எண்டது அறவே இல்லை எண்டதை ஒத்துக் கொள்ள வேணும். எப்பெடா விடுவினம். ஓடிப்போய் பெண்சாதி பிள்ளையளை ஏத்திக் கொண்டு சவாரிக்குப் போவம்.... இல்லாட்டிப் பிள்ளை குட்டியளை ரியூசனுக்கு ஏத்தி இறக்குவம்.... இல்லாட்டிக் குடும்பத்துக்குத் தேவையான சாமான்களை வாங்க மலிஞ்ச இடங்களைத் தேடிப்போவம்... எண்ட கரிசனையோடை வேலைக்கு வருகினமே ஒழிய.... உப்பிடி அவைக்குச் சோலி கனக்க. அவை பாக்கிற உத்தியோகம் ஒரு காசு வாற காசு மிஷின் இல்லாட்டித் தங்கடை பொழுது போக்கு எண்டு எண்ணிக் கொண்டு வாறவை எங்கை நிர்வாகம் நீதியா நடக்க வேணும் எண்டு நினைக்கப் போயினம்?

அரச நிர்வாகம் நடக்கிற எந்த இடத்திலையாவது போய் ஒரு அதிரடியாச் சோதிச்சுப் பாருங்கோ. சமூகத்தை வளப்படுத்த எண்டு கனபேரை அரசாங்கம் சம்பளம் குடுத்து வைச்சிருக்கினம். ஆனால் அவை தங்கடை நெஞ்சைத் தொட்டுச் சொல்லட்டும். சரியா உத்தியோகத்தைப் பாக்கினமோ எண்டு...!

உப்பிடித்தான் கப்பஸிலையும் பிரச்சினை தொடங்கியிருக்கு. கப்பஸ் நிர்வாகமும் செய்தது ஓரவஞ்சனைதானே? அதென்ன படிப்பிக்க வாறவை மிஷினிலை கைவிரலை அமத்தத் தேவை இல்லை. மற்ற வேலைக்கு வாறவை கைவிரலை அமத்த வேணும் எண்ட சட்டம்.. அப்ப உதிலை இருந்து தெரியுதெல்லே அங்கையும் ஏதோ குளறுபடி இருக்குதெண்டு. அப்ப அதிலை நியாயம் சொல்லத் தெரியாத கம்பஸ் நிர்வாகந்தான் நாட்டுக்கு நீதியான நிர்வாகியளைப் படிப்பிச்சு விடப்போகுது? என்ன கிரிசகெட்ட வேலை உது? உதாலைதான் கம்பஸிலை இருந்து படிச்சு வெளியிலை வாறவையளிலையும் கனபேர் தரக்குறைவா வருகினம். எங்கையும் பாருங்கோவன் தங்கடை மேல் அதிகாரியளுக்குக் காக்கா பிடிச்சுக் கொண்டு தங்கடை கதிரையளை எப்பிடிப் பாதுகாத்துக் கொண்டு சீவிக்கலாம் எண்டதை வடிவாப் படிச்சிருக்கினமே ஒழிய... எப்பிடி நீதியா நடக்கிறதெண்டது அவைக்குத் தெரியாது...

கல்வித்தரம் குறையுதெண்ணினம். காடைத் தனம் கூடிப்போச்சுதெண்ணினம். உதுக்கெல்லாம் காரணம் என்ன? சமூகத்தை வழிநடத்திறவை செக்கு மாடுகள் எண்டதுதானே அதின்ரை விளக்கம். செக்கு மாடுகள் என்னத்தை செய்யும். ஒரு இடத்திலை நிண்டு சுத்திச் சுத்தி வரும். அது மாதிரி இவையளும் காலமை போறது. நேரத்தைக் கடத்திறது. பின்னேரம் வாறது. அதுக்கிடையிலை வியாபாரம் செய்யிறவையும், வீட்டு வேலை செய்யிறவையும்... எண்டு அவைக்குப் பல சோலியள். அதுக்கிடையிலை உந்தக் கிரிக்கெற் விளையாட்டிலை சொல்லுற கொமன்ரி மாதிரி பலர் ரெலிபோனை எடுத்து அப்பப்ப தான் என்னத்தை செய்யிறன்... எங்கை நிக்கிறன்... எண்டு தங்கடை மனுசி மாருக்குச் சொன்னபடி... அப்ப பாருங்கோவன் உந்த கிருசகேடுகளை. உதை எல்லாத்தையும் நாங்கள் ஆரிட்டைச் சொல்லி அழ?

- கோளரங்கன்

---

# ஏரியல் ஷரோன்....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகின் மனிதாபிமானச் சட்டங்களைப் புறக்கணித்து "ஷரோன்" மனித குலத்துக்கு இழைத்த கொடுமைகளுக்கு, குற்றங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு உடையவராகிறார். அவர் இறந்த பிறகு அதற்கான வாய்ப்பு இல்லாமலாகின்றது.


"எப்படி வெல்லமுடியும் என்பதைத் தெரிந்து வைத்திருந்த அபார திறமைகொண்ட போர்வீரன்" என்று இஸ்ரேல் அதிபர் "ஷிமோன் பெரஸ்", "ஏரியல் ஷரோனின்" இறுதி அஞ்சலி நிகழ்வில் பாராட்டிப் பேசுகிறார். மிகக் கடுமையான விமர்சனங்களுக்குக் காரணமான போதிலும் யூத மக்களைப் பாதுகாக்கும் தனது இலக்கிலிருந்து அவர் ஒருபோதும் விலகிச் செல்லவில்லை என்று அமெரிக்க துணை ஜனாதிபதி "ஜோ பைடன்" இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரைக்கின்றார். "ஏரியல் ஷரோனை" வழியனுப்பி வைக்கும் அந்தச் சவ வீட்டில் மேலும் பல மேற்குலகத் தலைவர்கள் பங்கு கொண்டு தங்கள் பங்குக்கு அவரது பங்களிப்பை விதந்துரைக்கும் போது இவ்வாறான "போர் குற்ற விசாரணை" சாத்தியமானது தானா ? என்ற கேள்வியே இயல்பாக எழும்! ஆனால் மாற்றுக் குரல்களது கோரிக்கைகள், வேண்டுதல்கள் காலம் தாழ்த்தியாவது வரலாற்றில் நிரூபிக்கப்பட்டும், நிறைவேற்றப்பட்டும் வந்துள்ளது என்ற உண்மையும் நம் முன் வந்து விழுகின்றது. எனவே அதனை நாம் முற்றாக மறுதலித்து வரலாற்றை முன்நோக்கி நகர்த்திவிட முடியாது.

எனவே இவ்வாறான பெரும் குற்றங்களை இழைத்தவர்கள் அதற்குப் பொறுப்புக் கூறாமல், அதற்கு ஒரு விலையும் செலுத்தாது போனால் எதிர்கால உலகு இது போன்ற எண்ணற்ற பெரும் கொடுமைகளையும், இன அழிப்புகளையும் மேலும் எதிர் கொண்டாக வேண்டிய இக்கட்டு ஏற்படுகிறது. அனைத்துலக சமூகம் அதனைத் தொடர்ந்து அனுமதிக்கப் போகின்றதா ? என்ற சிக்கலான வினா எம் மத்தியில் எழுகின்றது.

மானுடத்துக்கு விரோதமான கொடூரமான குற்றங்களை நிரந்தரமாக்க முடியாது. நாகரீக சமுதாயமொன்றில் அதற்கான சின்னமாக, அடையாளமாக, குறியீடாகக் குற்றமிழைத்தவர்கள் அனைத்துலகின் நீதிமன்றுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாக ஆக்கப்படுதல் அவசியமானது. ஆனால் அவ்வாறான செயற்பாட்டுக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கும் மக்கள் கூட்டம் கடுமையான ஏமாற்றங்களைச் சந்தித்து வருகிறது. வலிமை பொருந்திய நாடுகளின் பல்வேறு நலன்கள் இதற்குள் குறுக்கிடுவதால் அனைத்துலகச் சட்டங்களை நடைமுறைப்படுவதில் ஏற்படும் இழுபறி சொல்லி மாளாதது. எனவேதான் இங்கு "ஏரியல் ஷரோன்" இறந்து விட்டாரா? என்றும் யோசித்துப் பார்க்கத் தோன்றுகிறது. இல்லை! இன்னும் பல "ஏரியல் ஷரோன்கள்" இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்!

# பரிசளிப்பு நிகழ்வு - 31.03.2019



















புதுவிதி 100 ஆவது இதழை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும், பாராட்டுப் பரிசில்களையும் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (31.03.2019) இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்






தொகுப்பு :- சி.விமலன்



புதுமதி





# நினைவுகூரல்

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான புரூஸ் யாட்லி கடந்தவாரம் தனது 71 ஆவது வயதில் காலமானார். இவர் இலங்கை உலகக் கிண்ணத்தை வென்றதன் பிற்பாடு அணியின் பயிற்சியாளராக 1996 - 1998 வரை விளங்கியவர்.

முரளிதரனுடைய வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒருவராக புரூஸ் யாட்லி விளங்கியவர். அவர் குறித்து முரளி 'முதன் முதலாக அவரை எனது 18 வயதில் இலங்கை கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்த பாடசாலை மாணவர்களுக்கான சுழற்பந்து பயிற்சி முகாமிலேயே சந்தித்தேன். அப்பொழுதே எதிர்காலத்தில் இலங்கை அணியில் நான் இடம்பெறுவேன் என்பதை இனங் கண்டதோடு நான் டெஸ்ட் போட்டி களில் விளையாடு வேன் என்று இளம் வயதிலேயே முதலில் கூறியவரும் அவர் தான்.

எனது பந்துவீச்சில் பலதரப்பட்ட உத்திகளை, பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டினார். குறிப்பாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தூஸ்ரா பந்துவீச்சை சக்லின் முஷ்ராக்கே வீசி வந்த நிலையில் இலங்கை அணிக்கு அவர் பயிற்சியாளராக இருந்த காலப்பகுதியில் எனக்கும் தூஸ்ரா பந்துவீச்சை அறிமுகப்படுத்தினார்.

எனது பந்துவீச்சு முறை பல தடவைகள் குற்றச்சாட்டுக்கு உள்ளான போதும் அதிலிருந்து நிச்சயம் மீண்டு வருவேன் என்று திடமாக நம்பியவர். பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய பிற்பாடும் நமக்குள் நல்ல நட்பு நீடித்தது.

நான் அவுஸ்ரேலியாவுக்கு செல்லும் போதோ அல்லது அவர் இலங்கைக்கு வரும் போதோ சந்தித்துக் கொள்வதுண்டு' என நினைவு கூர்ந்துள்ளார்.




# முதல் மூன்றும்

பார்சிலோனா சார்பில் இதுவரை அடிக்கப்பட்ட கோல்களில் சிறந்த கோலைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பொன்று கடந்தவாரம் பார்சிலோனா கழக நிர்வாகத்தால் நடத்தப்பட்டிருந்தது.

160 நாடுகளைச் சேர்ந்த 5 இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்கள் கலந்து கொண்ட இந்த வாக்கெடுப்பில் முதல் மூன்று இடங்களையும் மெஸ்ஸி அடித்த கோல்களே பெற்றுக்கொண்டுள்ளன.

மெஸ்ஸியின் 10 கோல்கள் அடங்கலாக மொத்தம் 63 கோல்கள் வாக்கெடுப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன.

அந்தவகையில் வாக்கெடுப்பில் முதலிடம் பிடித்த கோலானது 2006 / 07 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோபா டெல் ரே அரையிறுதிப் போட்டியில் கெராபே அணிக்கெதிராக மெஸ்ஸி அடித்த கோலாகும்.

45 சதவீதமான வாக்காளர்கள் தெரிவு செய்துள்ள இந்தக் கோலானது 1986 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்துக்கெதிராக மரடோனா அடித்த கோலை நினைவு படுத்தியிருந்தது.

அதுபோல 2014 / 15 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோபா டெல் ரே இறுதிப்போட்டியில் அத்லெடிக்கோ மட்ரிட் அணிக்கெதிராக மெஸ்ஸி அடித்த கோலை 28 சதவீதமானவர்களும் 2010 / 11 ஆம் ஆண்டு காலப்பகுதியில் லாலிகா தொடரில் றியல் மட்ரிட் அணிக்கெதிராக மெஸ்ஸி அடித்த கோலை 16 சதவீதமானவர்களும் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த கோலாகத் தெரிவு செய்துள்ளார்கள்.




# இப்படியும் சோதனை

பெங்கால் கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக விளங்கும் கங்குலி ஐ.பி.எல் தொடரில் டெல்லி கபிரல்ஸ் அணியின் ஆலோசகராகவும் விளங்கி வருவது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியக் கிரிக்கெட்டில் சில வருடங்களுக்கு முன்னரே ஒருவர் இரண்டு பதவிகளை ஒரே நேரத்தில் வகிக்க முடியாது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் கங்குலி ஏற்கனவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினதும் ஐ.பி.எல் தொடரினதும் தொழில் நுட்பக் குழு உறுப்பினராக விளங்கி வந்தாலும் டெல்லி அணியின் ஆலோசகர் பொறுப்பை ஏற்பதற்காக அவர் அப்பதவிகளைத் துறந்திருந்தார்.

இந்நிலையில் கொல்கத்தாவைச் சேர்ந்த இருவர் கங்குலிக்கு எதிராக புகார் ஒன்றை கடந்தவாரம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அளித்துள்ளார்கள். எதிர்வரும் 12 ஆம் திகதி கொல்கத்தா நைற்றைடர்ஸ் - டெல்லி கபிரல்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டி கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

கொல்கத்தா கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காகவே கங்குலியை தலைவராகத் தெரிவு செய்துள்ளோம். ஆனால் இந்தப் போட்டியில் டெல்லி வெற்றி பெறுவதற்காக கங்குலி ஆலோசனை வழங்குவது அவர் வகிக்கும் தலைவர் பதவிக்கு பொருத்தமானதில்லை என்பதே அதன் சாராம்சமாகும்.

# இம்முறை இவரே

பல்வேறு நாடுகளில் மரதன் போட்டிகள் நடைபெற்று வந்தாலும் லண்டன் மரதன் போட்டிக்கு தனியிடம் உண்டு. 1981 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் இந்த மரதன் ஓட்டத்தொடரின் 38 ஆவது வருடப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த மரதன் ஓட்டப் போட்டியை ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பிரபலத்தைக் கொண்டு ஆரம்பிப்பது ஒரு மரபாக உள்ளது. கடந்த 2017 ஆம் ஆண்டு இளவரசர் ஹரியும், 2018 ஆம் ஆண்டு ராணி எலிசபெத்தும் ஆரம்பித்து வைத்திருந்தார்கள். அந்தவகையில் இந்தவருடம் பிரிட்டனின் ரென்னிஸ் வீரரான அண்டி முரே ஆரம்பித்து வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து லண்டன் மரதன் ஓட்டப்போட்டியின் இயக்குனரான ஹக் பிரஷே 'அண்டி முரே பிரிட்டனின் மிகப்பெரிய விளையாட்டு நட்சத்திரங்களில் ஒருவராவார். நாட்டின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் உலகின் மிகச்சிறந்த மரதன் ஆகியவற்றை ஆரம்பித்து வைப்பதற்கு அவர் மிகப்பொருத்தமானவராக விளங்குவார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற அண்டி முரே இடுப்புப்பகுதியில் மேற்கொண்ட சத்திரசிகிச்சையால் தற்போது போட்டிகளில் இருந்து விலகி இருந்தாலும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.





# கௌரவம்

கடந்தவருடம் ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இங்கிலாந்து அணி 28 வருடங்களின் பின்னர் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறி இருந்தது. ஆனாலும் துரதிர்ஸ்டவசமாக அரையிறுதிப் போட்டியில் குரோஷிய அணியிடம் தோல்வியடைந்து வெளியேறி இருந்தது. அதேவேளை இந்தத் தொடரில் அதிக கோல்கள் அடித்து தங்கக் காலணி விருதை இங்கிலாந்து அணித் தலைவரான ஹரிகேன் பெற்றிருந்தார். இந்தச் சாதனைகளைக் கௌரவிக்கும் முகமாக கடந்தவாரம் பக்கிங்ஹாம் அரண்மனையில் நடைபெற்ற விழாவில் ஹரிகேனுக்கு Member of the Order of the British Empire விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தவிழாவில் இளவரசர் வில்லியம், இங்கிலாந்து உதைபந்தாட்ட சங்கத் தலைவர், ஹரிகேனின் குடும்பம் மற்றும் அவரது வருங்கால மனைவி உட்பட சிலரும் பங்குபற்றியிருந்தனர். இது குறித்து ஹரிகேன் 'இது மிகப் பெரிய கௌரவம். பெருமை மிக்க நாள்' என்று குறிப்பிட்டுள்ளார். முன்னதாக இவ்வருட புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ராணி எலிசபெத் வெளியிட்ட கௌரவம் பெறுவோர் பட்டியலில் ஹரிகேனின் பெயரும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 06.04.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.